# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.06.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு*

**இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகவுள்ள மொத்தவிற்பனை வரவின் மீது சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு எனவறியப்படும் அறவீடொன்றை விதிப்பதற்காகவும் சேகரிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டமூலம்**

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 115.00** **தபாற் செலவு : ரூபா 45.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு*

*ச. வ.- ஓ. 81/2021*

***இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகவுள்ள மொத்தவிற்பனை வரவின்மீது சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு எனவறியப்படும் அறவீடொன்றை விதிப்பதற்காகவும் சேகரிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2022 ஆம் ஆண்டு யூலை முதலாம் நாளன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

### பாகம் I

### சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டை விதித்தல்

*இச்சட்டம் ஏற்புடைய தாகின்ற ஆட்கள்*

**2.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில், "வரிவிதிக்கப் படற்பாலவரான ஆள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவரும்)-

(அ) ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்றவரும்;

(ஆ) ஏதேனும் பொருளின் உற்பத்தித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரும்;

(இ) ஏதேனும் விவரணத்தினதான சேவையொன்றை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவரும்; அல்லது

(ஈ) பந்தி (ஆ) வின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவுள்ள ஓர் உற்பத்தியாளராகவிருந்து அப்பொருளின் உற்பத்தியாளரினாலான விற்பனை தவிர்ந்த ஏதேனும் பொருளின் இறக்குமதியும் விற்பனையும் உட்பட அத்தகைய பொருளின் மொத்தவிற்பனை அல்லது சில்லறை விற்பனைத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவரும்,

ஆன ஒவ்வோர் ஆளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டை விதித்தல்

**3.** (1) (இச்சட்டத்தில், "அறவீடு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) "சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு" எனவறியப் படுவதுமான அறவீடொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் முறையில், 2.5 சதவீதம் என்ற வீதத்தில், இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பாகவுள்ள மொத்தவிற்பனைவரவு தொடர்பில் 2022 ஆம் ஆண்டு யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் (இச்சட்டத்தில், "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒவ்வொரு காலாண்டுக்காகவும் ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளிடமிருந்தும் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) 2 ஆம் பிரிவின் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப் பட்டவொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் விடயத்தில், அறவீடானது, அத்தகைய பொருளின் இறக்குமதியிலிருந்து எழுகின்ற அத்தகைய ஆளின் பொறுப்பாகவுள்ள மொத்த விற்பனைவரவு தொடர்பில் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2 ஆம் பிரிவின் (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் விடயத்தில், அறவீடானது, அத்தகைய ஆளின் பொறுப்பாகவுள்ள மொத்தவிற்பனைவரவு தொடர்பில் விதிப்பனவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, "மொத்தவிற்பனைவரவு" என்பது,-

(அ) ஏதேனும் பொருளின் இறக்குமதியிலிருந்து எழுகின்ற, 2 ஆம் பிரிவின் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் தொடர்பாக, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் சேர்பெறுமதி வரியின் நோக்கத்துக்காக நிச்சயிக்கப்பட்ட அப்பொருளின் பெறுமதி என்று பொருளாகும், ஆனால் முதலாம் அட்டவணையின் பாகம் 1அ வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விலக்களிக்கப் பட்ட பொருளின் பெறுமதியை உள்ளடக்காது;

(ஆ) 2 ஆம் பிரிவின் பந்தி (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலவரான எவரேனுமாள் மற்றும் ஏதேனும் இயைபான காலாண்டு தொடர்பாக, முதலாம் அட்டவணையின் பாகம் 1அ வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விலக்களிக்கப்பட்ட பொருள் தவிர அத்தகைய ஆளினால் இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் அக்காலாண்டில் பெறப்படற்பாலதான, பெறப்பட்டதாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, பணத்தொகை என்று பொருளாகும்;

(இ) 2 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்ட எவரேனும் வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள், மற்றும் இயைபான ஏதேனும் காலாண்டு தொடர்பாக,-

(i) இலங்கையில் எவையேனும் நிதிசார் சேவைகளை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனுமாளினால் எவையேனும் நிதிசார் சேவைகள் இலங்கையில் வழங்கப்படுவதிலிருந்து பெறப்படற்பாலதான, பெறப்பட்டதாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, பணத்தொகை என்று பொருளாகும், ஆனால் முதலாம் அட்டவணையின் பாகம் II இல் குறிப்பீடுசெய்யப்பட்ட விலக்களிக்கப்பட்ட சேவைகளை உள்ளடக்காது;

(ii) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுதிவரிச் சட்டத்தின் நோக்கத்துக்காகச்

சொல்லப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் நிச்சயிக்கப்பட்ட நிலைச்சொத்து மற்றும் சீராக்கத்திலிருந்து என்ற தொழிலிலிருந்து எழுகின்ற ஏதேனும் சேவையின் பெறுமதி என்று பொருளாகும், ஆனால் முதலாம் அட்டவணையின் பாகம் II இல் குறிப்பீடுசெய்யப்பட்ட விலக்களிக்கப்பட்ட சேவைகளை உள்ளடக்காது; அத்துடன்

(iii) உட்பந்திகள் (i) மற்றும் (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட சேவைகள் மற்றும் முதலாம் அட்டவணையின் பாகம் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவை தவிர்ந்த இலங்கையில் ஏதேனும் சேவையை வழங்குவதிலிருந்து பெறப்படற்பாலதான, பெறப்பட்டதாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, பணத்தொகை என்று பொருளாகும்; அத்துடன்

(ஈ) 2 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள், மற்றும் ஏதேனும் இயைபான காலாண்டு தொடர்பாக, முதலாம் அட்டவணையின் பாகம் 1ஆ வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விலக்களிக்கப்பட்ட பொருள் தவிர்ந்த இலங்கையில் ஏதேனும் பொருளின் மொத்தவிற்பனையிலிருந்து அல்லது சில்லறை விற்பனையிலிருந்து பெறப்படற்பாலதான, பெறப்பட்ட தாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, பணத்தொகை என்று பொருளாகும்.

(3) எவரேனும் வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் இயைபான காலாண்டுக்காக (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மொத்த விற்பனைவரவு பின்வருவனவற்றை உள்ளடக்குதலாகாது:-

(அ) அக்காலாண்டில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடன்:

ஆயின், எவ்வாறாயினும், இயைபான ஏதேனும் காலாண்டில் அறவிடப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடன், அந்த இயைபான காலாண்டின் மொத்தவிற்பனை வரவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அந்த இயைபான காலாண்டுக்காகச் செலுத்தப்பட்ட 2022ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின்கீழான ஏதேனும் சேர்பெறுமதி வரி; அல்லது

(இ) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு ஏதேனும் சர்வதேச நிகழ்வு தொடர்பாக ஏற்றுமதி அபிவிருத்தித் தள்ளுபடியின்கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் தள்ளுபடி.

## பாகம் II

### சட்டத்தின்கீழான பதிவு

பதிவு செய்யப்பட வேண்டிய வரிவிதிக்கப் படற்பால வர்களான ஆட்கள்

**4.** (1) இரண்டாம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் தவிர்ந்த வரும், (இச்சட்டத்தில், “வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்றவரும் அல்லது நிறைவேற்றுகின்றவருமான ஒவ்வொரு வரிவிதிக்கப்படற் பாலவரான ஆளும் -

(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு நேர்முன்னரான பன்னிரெண்டு மாதகாலப்பகுதியினுள் எந்த வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் மொத்த விற்பனைவரவின் கூட்டுமொத்தம் நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சியதோ அந்த வரிவிதிக்கப் படற்பாலவரான ஆளின் விடயத்தில், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்;

(ஆ) 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி எந்த வரிவிதிக்கப் படற்பாலவரான ஆளுக்குப் பந்தி (அ) ஏற்புடைய தாவதில்லையோ அந்த வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் விடயத்தில், ஒரு காலாண்டுக்கான மொத்த விற்பனைவரவின் கூட்டுமொத்தம் எத்தேதியன்று முப்பது மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அத்தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்,

குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் (இச்சட்டத்தில், “ஆணையாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய நோக்கத்துக்காக விண்ணப்பமொன்றைச் செய்வதன்மூலம் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாளின் மொத்தவிற்பனைவரவு தனியொரு தனிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பானதென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யும் நோக்கத் துக்காக அத்தகைய ஆளின் மொத்தவிற்பனைவரவைக் கணக்கிடு வதில் அத்தகைய மொத்தவிற்பனைவரவு தவிர்க்கப்படலாம்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாளினாலான விண்ணப்பத்தைப் பெறுவதன்மேல்; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று பெறப்பட்டிராதவிடத்து, ஆனால் ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட செயற்பாடு களின் தன்மையைக் கருத்திற்கொண்டு இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆள் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றாரென அபிப்பிராயப் படுமிடத்து,

ஆணையாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து பயனுறுவதாக (இச்சட்டத்தில், “பதிவுசெய்யப்பட்ட ஆள்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய ஆளைப் பதிவுசெய்தல் வேண்டும்.

பதிவை இல்லாதாக்குதல்

**5.** (1) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் -

(அ) அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆள் 2 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதானவொரு செயற்பாட்டைக் கொண்டுநடாத்தாதொழிந்துள்ளவிடத்து அல்லது நிறைவேற்றாதொழிந்துள்ளவிடத்து; அல்லது

(ஆ) இயைபான காலாண்டின் நேர்முற்போந்த ஒவ்வொரு நான்கு காலாண்டுகளின்போதும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்தவிற்பனைவரவு நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து,

பதிவுத் தேதியை அடுத்துப்பின்வரும் பன்னிரெண்டு மாதகாலப் பகுதியொன்று கழிந்தபின்னர் எந்நேரத்திலேனும் அவரது பதிவை இல்லாதாக்குவதற்காக ஆணையாளர் தலைமையதிபதிக்குக் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்ய லாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுடன் திருப்திப் படுவதன்மேலும்-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மீதும் அத்தகைய பதிவை இல்லாதாக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) எந்நேரத்திலும் அத்தகைய பதிவை இல்லாதாக்கலாம்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் உள்ளனவெனத் திருப்திப்படாதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி எவரேனுமாளின் பதிவை இல்லாதாக்குவதற்கு மறுக்கலாம்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவரின் பதிவை இல்லாதாக்குமிடத்து அவர் பதிவஞ்சல்மூலம் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் பதிவு இல்லாதாக்கப்பட்ட தேதியை அத்தகைய ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்.

பதிவு இல்லாதாக்கப்பட்டமையினால் பொறுப்பு பாதிக்கப்பட மாட்டாது

**6**. ஐந்தாம் பிரிவின்கீழ் பதிவு இல்லாதாக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர், இச்சட்டத்தின்கீழ் அவர் ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆளாகவிருக்கையில் இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காகப் பொறுப்பாதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் குறித்தசில மாற்றங்களை அறிவித்தல் வேண்டும்

**7**. பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோராளும் பின்வருவனவற்றிலான ஏதேனும் மாற்றத்தை, அத்தகைய மாற்றம் இடம்பெற்றபின்னர் பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் அறிவித்தல் வேண்டும்:–

(அ) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு அத்தகைய ஆளினால் எந்தப் பெயரில், முகவரியில் மற்றும் இடத்தில் கொண்டுநடாத்தப்படுகின்றதோ அல்லது நிறைவேற்றப்படுகின்றதோ அந்தப் பெயரிலான, முகவரியிலான மற்றும் இடத்திலான மாற்றம்;

(ஆ) அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் தன்மையிலான மாற்றம்;

(இ) அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற ஏதேனும் செயற்பாடு தொடர்பில் விபரத்திரட்டுக்களையும் வேறு ஆவணங்களையும் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளிலான மாற்றம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வரிவிதிக்கப்படற்பால தான செயற்பாட்டின் சொத்தாண்மையிலான மாற்றம்.

பாகம் III

## விபரத்திரட்டுக்களும் தகவல்களும்

விபரத் திரட்டுக்களும் தகவல்களும் கொடுத்துதவப் பட வேண்டும்

**8.** (1) பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோராளும் ஒவ்வொரு காலாண்டுக்குமான விபரத்திரட்டொன்றை ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் ஒவ்வோர் இயைபான காலாண்டினதும் முடிவுக்குப்பின்னர் இருபதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு விபரத்திரட்டும் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய படிவத்திலிராததும் (1) ஆம் உட்பிரிவின் கீழானதுமான அத்தகைய விபரத்திரட்டைக் கொடுத்துதவுகின்ற ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட ஆளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) உதவி ஆணையாளர், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவருக்கு, அறிவித்தலொன்று பெறப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துகின்ற அத்தகைய அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(4) உதவி ஆணையாளர், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையான விபரத்திரட்டொன்றைப் பெற்றதன் மேல் மட்டுமே விபரத்திரட்டு பெறப்பட்டமையை ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்; இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இது ஒரு செல்லுபடியான விபரத்திரட்டொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாளின் மொத்தவிற்பனைவரவு தொடர்பில் முழுத் தகவல்களையும் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களுக்காக, உதவி ஆணையாளர், பின்வருவனவற்றைச் செய்யும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துகின்ற அறிவித்த லொன்றை எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் கொடுக்கலாம்:–

(அ) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள், ஒரு கைந்நூலில், பொறிமுறை அல்லது இலத்திரனியல் படிவத்தில் அல்லது அவற்றின் இணைப்பில் அடங்கியுள்ளனவாயினுஞ்சரி, எவையேனும் கணக்குப் புத்தகங்களை, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புக்களை, அனுப்புபொருட்பட்டியல் களை, காசோலைகளை, வங்கிக்கூற்றுக்களை, பணஞ் செலுத்தும் நறுக்குகளை, கணக்குகளை, கணக்காய்வாளர் களின் அறிக்கைகளை அல்லது அவரது உடைமையிலுள்ள குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு ஆவணங்களை, அத்தகைய புத்தகங்களில், ஆவணங்களில் மற்றும் கணக்குகளில் உள்ள பதிவீடுகளைச் சரிபார்ப்பதற்கென உதவி ஆணையாளரின் பரிசோதனைக்காகக் காண்பிக்கும் படியும் அல்லது அனுப்பும்படியும்; அல்லது

(ஆ) அவ்வாளினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது நிறை வேற்றப்படும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பாக விசாரணைசெய்யப்படும் நோக்கத்துக்காக அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய தேதியிலும் அத்தகைய நேரத்திலும் நேரடியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிமூலமாக வருகைதரும்படியும்.

(6) ஒரு கைந்நூலில், பொறிமுறை அல்லது இலத்திரனியல் படிவத்தில் அல்லது அவற்றின் இணைப்பில் அடங்கியுள்ளன வாயினுஞ்சரி, எவையேனும் கணக்குப் புத்தகங்களை, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புக்களை, அனுப்புபொருட் பட்டியல்களை, காசோலைகளை, வங்கிக்கூற்றுக்களை, பணஞ்

செலுத்தும் நறுக்குகளை, கணக்குகளை, கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை அல்லது அவரது உடைமையிலுள்ள குறித்துரைக் கப்படக்கூடியவாறான வேறு ஆவணங்களை, அத்தகைய புத்தகங்களில், ஆவணங்களில் மற்றும் கணக்குகளில் உள்ள பதிவீடுகளைச் சரிபார்ப்பதற்கென உதவி ஆணையாளர் ஒருவர், இச்சட்டத்தின் நோக்கத்துக்காகக் கட்டுக்காப்பில் வைத்திருப்பது அவசியமாகவிருக்கும் காலம்வரை அவ்வாறு வைத்திருக்கலாம்.

(7) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாளினால் அல்லது அவர்சார்பில் இச்சட்டத்தின்கீழ் கொடுத்துதவப்படுவதாகக் கொள்ளப்படுகின்ற ஒரு விபரத்திரட்டு, கூற்று அல்லது படிவம் எல்லா நோக்கங் களுக்காகவும், முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய, விடயத்திற் கேற்ப, அவ்வாளினால் அல்லது அவரது அதிகாரத்தின்மூலம் கொடுத்துதவப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விபரத்திரட்டை, கூற்றை அல்லது படிவத்தைக் கையொப்பமிடுகின்ற எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள், அவற்றின்கண் அடங்கியுள்ள எல்லாக் கருமங்களும் பற்றிக் கவனமுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(8) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அல்லது அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்பட்ட ஓர் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி–

(அ) ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகை யொன்றிலான தண்டமொன்றை அத்தகைய ஆளுக்கு விதிக்கலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய தண்டம் விதிக்கப்பட்டமைபற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகை கள்மூலம் அறிவித்தல்கொடுத்து அத்தகைய ஆளைப் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தலாம்:–

(i) அத்தகைய தண்டத்தைச் செலுத்தும்படியும்; அத்துடன்

(ii) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதி யினுள் இப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும்படியும்.

(9) எட்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகுவதற்குத் தான் தவறியமை அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாகவிருந்ததென்றும் தான் அடுத்துப்பின்னர் இவ்வேற்பாடுகளுக்கு இணங்கியொழுகி யுள்ளாரென்றும் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தால், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய ஆளுக்கு விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தைக் குறைக்கலாம் அல்லது வெற்றானதாக்கலாம்.

## பாகம் IV

## அறவீட்டை மதிப்பீடுசெய்தல்

**9**. (1) (அ) உதவி ஆணையாளரின் அபிப்பிராயத்தில் அறவீடு விதிக்கப்படற்பாலவரான எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள் இயைபான காலாண் டுக்கான விபரத்திரட்டொன்றைக் கொடுத் துதவுவதற்குத் தவறுமிடத்து; அல்லது

மதிப்பீடு செய்வதற்கு உதவி ஆணையாள ருக்குள்ள தத்துவம்

(ஆ) அறவீடு விதிக்கப்படற்பாலவரான எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள் ஏதேனும் இயைபான காலாண்டு தொடர்பில் விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுமிடத்து ஆனால் அந்த இயைபான காலாண்டுக்கான அறவீட்டை முழுமையாக அல்லது பகுதியளவில் செலுத்துவதற்குத் தவறுமிடத்து; அல்லது

(இ) எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள், இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆளினால்

கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டுக்கான ஏதேனும் மாற்றத்தை அல்லது சேர்த்தலைச் செய்யும்படி எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கோரிக்கை விடுக்குமிடத்து,

உதவி ஆணையாளரின் அபிப்பிராயத்தில் அந்த இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆள் செலுத்தியிருக்கவேண்டிய அறவீட்டுத் தொகையை உதவி ஆணையாளர் மதிப்பீடுசெய்யலாம் என்பதுடன் எழுத்திலான அறிவித்தல்மூலம் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம், அத்தகைய தொகையை உடனடியாகச் செலுத்தும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதலும் வேண்டும். இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆள் தொடர்பில் அவ்வாறு மதிப்பீடுசெய்யப்பட்ட தொகை அந்த இயைபான காலாண்டுக்காக அவரினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத் தொகையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் 18 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தைக் குறிப்பீடு செய்யலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான மதிப்பீடொன்று செய்யப்படுமிடத்து, இயைபான காலாண்டுக்கான அறவீடாக அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கும் அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையேயான வித்தியாசம், அந்த இயைபான காலாண்டுக்கான தவணைதவறிய அறவீடாக இருத்தல் வேண்டும்.

மேலதிக மதிப்பீடுகள்

**10.** (1) அறவீடு விதிக்கப்படற்பாலவரான பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர், இயைபான காலாண்டுக்காக, அக்காலாண்டுக்காக அவரினால் செலுத்தப்படற்பாலதான அல்லது அவரிடமிருந்து விதிக்கப்படற்பாலதான அறவீட்டின் உரிய தொகைக்குக் குறைவான தொகையொன்றை அறவீடாகச் செலுத்தியுள்ளாரென உதவி ஆணையாளருக்குத் தோன்றுமிடத்து, உதவி ஆணையாளரின் அபிப்பிராயத்தின்படி அத்தகைய ஆளினால் அறவீடானது எந்த

மேலதிகத் தொகையில் செலுத்தப்பட்டிருக்கவேண்டுமோ அந்த மேலதிகத் தொகையில் உதவி ஆணையாளர் அத்தகைய ஆளை மதிப்பீடு செய்யலாம். உதவி ஆணையாளர் அத்தகைய ஆளுக்கு அத்தகைய மதிப்பீடுபற்றிய ஓர் அறிவித்தலை அதற்கிணங்கக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான மதிப்பீடொன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு மதிப்பீடுசெய்யப்பட்ட தொகை அந்த இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆள்தொடர்பில் தவணைதவறிய அறவீடாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அத்தகைய ஆள், அந்த இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆள் எத்தேதியன்று அறவீட்டைச் செலுத்தியிருக்கவேண்டுமோ அத்தேதியிலிருந்து 18 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய தொகை தொடர்பிலான தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

*உதவி ஆணையாளர் காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்*

**11.** பத்தாம் பிரிவின்கீழ் இயைபான காலாண்டுக்காக எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆளினால் கொடுத்துதவப்பட்ட விபரத் திரட்டொன்றை உதவி ஆணையாளர் ஏற்றுக்கொள்ளாதவிடத்து அல்லது அத்தகைய ஆளின்மீது மேலதிக மதிப்பீடொன்றைச் செய்யுமிடத்து உதவி ஆணையாளர் அதற்கான காரணங்களை அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் அறிவித்தல் வேண்டும்.

*திறந்த சந்தைப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு உதவி ஆணையாளருக்குள்ள தத்துவம்*

**12.** பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர், அறவீட்டின் செலுத்துகையைத் தவிர்ப்பதற்கென -

(அ) ஏதேனும் பொருளின் அல்லது ஏதேனும் சேவையின் திறந்த சந்தைப் பெறுமதிக்குக் குறைவான பெறுமதிக்காக அல்லது எப்பெறுமதிக்காகவுமல்லாமல் அத்தகைய பொருளை விற்பனை செய்துள்ளாரென அல்லது சேவையை வழங்கியுள்ளாரென; அல்லது

(ஆ) இணைந்த இரண்டு ஆட்களிடையே, எந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏதேனும் பொருளின் விற்பனை அல்லது ஏதேனும் சேவையின் வழங்குகை செய்யப்

பட்டுள்ளதோ அந்தக் கொடுக்கல்வாங்கலைச் செய்துகொண்டுள்ளாரென,

உதவி ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து, உதவி ஆணையாளர், அத்தகைய கொடுக்கல்வாங்கலின் சூழ்நிலைகளையும் அத்தகைய பொருளின் விற்பனையினது அல்லது அத்தகைய சேவையின் வழங்குகையினது காலப்பகுதியையும் கருத்திற் கொண்டு, எந்தப் பொருளின்மீது அல்லது சேவையின்மீது அறவீடு விதிப்பனவுசெய்யப்படவேண்டுமோ அத்தகைய பொருளின் அல்லது சேவையின் திறந்த சந்தைப் பெறுமதியைத் தீர்மானித்தல் வேண்டும்.

குறித்தசில கொடுக்கல் வாங்கல்களும் கையுதிர்ப்புக் களும் புறக்கணிக்கப் படுதல் வேண்டும்

**13**. எவரேனுமாளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத் தொகையைக் குறைக்கின்ற அல்லது குறைக்கின்ற பயனைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் கொடுக்கல்வாங்கல் செயற்கையானது அல்லது போலியானது அல்லது ஏதேனும் கையுதிர்ப்புக்கு உண்மையில் பயன் கொடுக்கப்படவில்லையென உதவி ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து அவர் அத்தகைய ஏதேனும் கொடுக்கல்வாங்கலை அல்லது கையுதிர்ப்பைப் புறக்கணிக்கலாம் என்பதுடன் கொடுக்கல்வாங்கலுக்கான அல்லது கையுதிர்ப்புக்கான திறத்தவர்கள் அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்படற்பாலவர்களாதலும் வேண்டும்.

விபரத் திரட்டுக்களும் மதிப்பீடுகளும் பற்றிய சான்று

**14**. இச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டின் அல்லது செய்யப்பட்ட மதிப்பீட்டின் பிரதியென அல்லது அதிலிருந்தான பிரித்தெடுத்தபகுதியெனக் கொள்ளப்படுகின்றதும் ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்டதுமான எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலமான ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தல் எல்லா நீதிமன்றங்களிலும் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதி பற்றிப் போதிய சான்றாதலும் வேண்டும்.

மேலதிக மதிப்பீட்டுக்கான காலத்தை வரையறுத்தல்

**15**. (1) ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் அறவீட்டுக்கான இயைபான காலாண்டு தொடர்பில் 8 ஆம் பிரிவின்கீழான விபரத்திரட்டொன்றை எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள்

கொடுத்துதவியுள்ளவிடத்து, எந்த இயைபான காலாண்டுதொடர்பில் விபரத்திரட்டு கொடுத்துதவப்பட்டுள்ளதோ அந்த இயைபான காலாண்டின் முடிவிலிருந்து மூன்றாண்டுகள் முடிவுற்றபின்னர் மேலதிக மதிப்பீடொன்றைச் செய்தல் உதவி ஆணையாளருக்குச் சட்டமுறையானதாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏதேனும் இயைபான காலாண்டுக்காக ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத்தொகையைத் தீர்மானிப்பதற்கு அவசியமான எல்லா முக்கியமான நிகழ்வுகளையும் முழுமையாகவும் உண்மையாகவும் வெளிவிடுவதற்கு அவர் வேண்டுமென்று அல்லது மோசடியானமுறையில் தவறியுள்ளாரென உதவி ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து, மேலதிக மதிப்பீட்டை எந்நேரத்திலும் செய்வது உதவி ஆணையாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## பாகம் V

## அறவீட்டைச் செலுத்துதலும் சேகரித்தலும்

கணக்கீட்டு அடிப்படை

**16.** ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட ஆளும் ஒன்றுதிரளுகை அடிப்படையில் அறவீட்டுக்காகக் கணக்குக்காட்டுதல் வேண்டும்.

அறவீட்டைச் செலுத்துதல்

**17.** (1) பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோராளும், இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆளின்மீது மதிப்பீடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும், அக்காலாண்டின் இயைபான மாதத்தை உடனடுத்துப் பின்வரும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அவரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் செலுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ளவாறு செலுத்தப்படாத ஏதேனும் அறவீடு தவணைதவறியதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறவீடு எந்தப் பதிவுசெய்யப்பட்ட

ஆளினால் செலுத்தப்படற்பாலதோ அந்த ஆள் அல்லது ஏதேனும் அறவீடு ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் செலுத்தப்படற் பாலதாகவிருக்குமிடத்து அத்தகைய ஒவ்வோராளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணைதவறியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

*தவணை தவறிய மைக்கான தண்டம்*

**18.** (1) ஏதேனும் அறவீட்டின் செலுத்துகை தவணை தவறியதாக விருக்குமிடத்து, தவணைதவறியவர், தவணைதவறியதாகவுள்ள அத்தகைய அறவீட்டுடன்சேர்த்து மேலதிகமாகப் பின்வருவன வற்றைத் தண்டமாகச் செலுத்துதல் வேண்டும்:–

(அ) தவணைதவறியதாகவுள்ள தொகையின் பத்து சத வீதத்துக்குச் சமமான பணத்தொகையொன்று; அத்துடன்

(ஆ) அத்தகைய அறவீடு எந்த மாதத்தில் தவணைதவறியதாக விருப்பதற்கு ஆரம்பித்ததோ அந்த மாதத்தை அடுத்துப் பின்வரும் மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, அடுத்துப்பின்வரும் ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி நாளன்று முடிவடைகின்ற ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும் அல்லது அது எக்காலப்பகுதியின்போது தவணைதவறியதாகவுள்ளதோ அத்தகைய காலப்பகுதியின் பாகம் தொடர்பில் தவணை தவறியதாகவுள்ள தொகையின் இரண்டு சதவீதத்துக்குச் சமமான மேலதிகப் பணத்தொகையொன்று:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை, தவணைதவறுகை யிலுள்ள நூறு சதவீதத்தை எவ்விடயத்திலும் விஞ்சுதலாகா தென்பதுடன் அத்தகைய ஏதேனும் தொகை, தவணைதவறுகை எந்த விசேட சூழ்நிலைகள் காரணமாக இடம்பெற்றதோ அந்த எவையேனும் விசேட சூழ்நிலைகள் காரணமாக அத்தகைய தொகையின் விட்டுக்கொடுப்பு அல்லது குறைப்பு நீதியானதும் ஒப்புரவானதுமாகவிருக்கும் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படின், விட்டுக்கொடுக்கப்படலாம் அல்லது குறைக்கப் படலாம்.

(2) பாகம் VII இன்கீழான மேன்முறையீடொன்றின் இறுதித் தீர்மானத்தின்மேல், தவணைதவறுகையிலுள்ள எந்த அறவீட்டுக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் பணத்தொகை அல்லது பணத் தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளதோ அல்லது சேர்க்கப் பட்டுள்ளனவோ அந்த அறவீடு குறைக்கப்படுமிடத்து, அப்போது அத்தகைய பணத்தொகை அல்லது பணத்தொகைகள் அவ்வாறு குறைக்கப்பட்ட அறவீட்டின்மீது கணக்கிடப்படுதல் வேண்டும்.

*சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி யினால் அறவீடு சேகரிக்கப் படுதல்*

**19.** (1) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான ஆளிடமிருந்தும், அத்தகைய ஆளினால் இறக்குமதிசெய்யப்பட்ட ஒவ்வொரு பொருள் தொடர்பிலும் அத்தகைய ஆளிடமிருந்து விதிக்கப்படற்பாலதான அறவீட்டை, அத்தகைய பொருள் இறக்குமதிசெய்யப்படும் நேரத்தில் சேகரித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகையைக் குறித்துரைக்கின்ற அத்தகைய பொருள் தொடர்பான இறக்குமதி அனுப்புபொருட்பட்டியலின்மீது அவர் புறக்குறிப்பொன்றைச் செய்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சேகரிக்கப்பட்ட ஏதேனும் தொகை, அத்தகைய பொருளின் இறக்குமதியிலிருந்து எழுகின்ற மொத்தவிற்பனைவரவு தொடர்பில் விதிக்கப்படற்பாலதான அறவீடெனக் கருதப்படுதல்வேண்டுமென்பதுடன் அத்தகைய தொகை அவ்வாறு சேகரிக்கப்பட்ட நாளன்று ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்டுள்ள தாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சேகரிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகை, அத்தகைய தொகையைச் சேகரிக்கும் மற்றும் அறவிடும் நோக்கத்துக்காக அத்துடன் இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படற்பாலதான சுங்கத் தீர்வையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய தொகையின் சேகரிப்புக்கும் அறவீட்டுக்கும் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(4) இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள்-

(அ) ஆணையாளர் தலைமையதிபதியினால்;

(ஆ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் சேகரிக்கப்படற்பாலதான ஏதேனும் தீர்வையை, அறவீட்டை அல்லது ஏதேனும் விதிப்பனவை அறவிடுவதற்காகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால்; அல்லது

(இ) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் சேகரிக்கப்படற்பாலனவான எவையேனும் வருமதிகளை அறவிடுவதற்காக, அச்சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையினால்,

விற்பனைசெய்யப்படுமிடத்து, அத்தகைய பொருளின் கொள்வனையாளர் 2 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க அத்தகைய ஆளுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

இஸ்லாமிய நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள்

**20.** ஏதேனும் இஸ்லாமிய நிதிசார் கொடுக்கல்வாங்கலிலிருந்து எழுகின்ற மொத்தவிற்பனைவரவு இஸ்லாமியஞ்சாரா நிதிசார் கொடுக்கல்வாங்கலுக்கு உள்ளீட்டில் சமமானவாறாக ஒத்தவொரு முறையில் அறவீட்டுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

## பாகம் VI

## மேன்முறையீடுகள்

ஆணையாளர் தலைமையதிபதிக்கான மேன்முறையீடுகள்

**21.** (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவரது பதிவு இல்லாதாக்கப்பட்டுள்ள எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் அவர்தொடர்பில் செய்யப்பட்ட, விடயத்துக்கேற்ப, ஏதேனும் மதிப்பீட்டுடன், மேலதிக மதிப்பீட்டுடன்

அல்லது தண்டத்துடன் அதிருப்தியடைந்தால், விடயத்துக்கேற்ப, அத்தகைய மதிப்பீட்டுக்கெதிராக மேலதிக மதிப்பீட்டுக்கெதிராக, அல்லது தண்டத்துக்கெதிராக, விடயத்துக்கேற்ப, அத்தகைய மதிப்பீடு, மேலதிக மதிப்பீடு அல்லது தண்டவிதிப்புப் பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டபின்னர் முப்பது நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஆள், அத்தகைய மேன்முறையீடு எவ்வாறிருப்பினும், அத்தகைய மதிப்பீட்டின்மூலம் அல்லது மேலதிக மதிப்பீட்டின்மூலம் விதிக்கப்பட்ட அறவீட்டை, இச்சட்டத்தினால் அவருக்கு விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து, செலுத்துதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, மேன்முறையீட்டாளர் இலங்கையில் இல்லாமை காரணமாக, அவரின் சுகவீனம் காரணமாக அல்லது வேறு நியாயமான காரணத்துக்காக (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேன்முறையீடுசெய்வதிலிருந்து அவர் தடுக்கப்பட்டாரெனத் திருப்திப்படுவதன்மேல், அம்மேன்முறையீட்டைச் செய்வதற்கான காலநீடிப்பொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மேன்முறையீடும் எழுத்திலான மனுவொன்றின் மூலம் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களை அது திட்டவட்டமாகக் குறிப்பிடுதலும் வேண்டும்.

(4) ஒவ்வொரு மேன்முறையீட்டினதும் பெறுகையானது, அது பெறப்பட்டதிலிருந்து முப்பதுநாட்களினுள் ஒப்புக்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு ஒப்புக்கொள்ளப்படுமிடத்து, ஒப்புக்கொள்ளற் கடிதத்தின் தேதி, இப்பிரிவின் நோக்கத்துக்காக, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்ட தேதியாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப் பட்டவாறு ஏதேனும் மேன்முறையீட்டின் பெறுகை ஒப்புக்கொள்ளப் படாதவிடின், அத்தகைய மேன்முறையீடு, அது ஆணையாளர்

தலைமையதிபதிக்கு வழங்கப்பட்ட நாளன்று ஆணையாளர் தலைமையதிபதியினால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒரு விபரத்திரட்டு இல்லாதிருக்கையில் மதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, ஒரு விபரத்திரட்டின்மீது வருமதியான அறவீடு மற்றும் தண்டம் செலுத்தப்பட்டமைபற்றிய எண்பிப்புடன் மேன்முறையீடானது அத்தகைய விபரத்திரட்டுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைச் செய்கின்ற ஆளொவ்வொருவரும், அத்தகைய ஆள் ஏலவே அவ்வாறு செய்திருந்தாலொழிய, அத்தகைய மதிப்பீட்டறிவித்தல் விடுக்கப்பட்ட தேதிவரை திரண்டுள்ள அதன்மீதான ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து இயைபான காலாண்டுக்காக அவரினால் கொடுத்துவப்பட்ட விபரத்திரட்டின் அடிப்படையில் அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத் தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய செலுத்துகையை எண்பிக்கின்ற பற்றுச்சீட்டொன்றை மேன்முறையீட்டுடன் இணைத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய மதிப்பீட்டறிவித்தல் விடுக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதற்கண்மித்த தேதியில் மேன்முறையீட்டாளரினால் உறப்பட்ட பாரிய நிதிசார் நெருக்கடி காரணமாக அல்லது வேறு நியாயமான காரணத்தினால் மேன்முறையீட்டாளர் அத்தகைய அறவீட்டையும் தண்டத்தையும் செலுத்துவதிலிருந்து தடுக்கப்பட்டாரெனத் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய அறவீட்டையும் செலுத்துகைத் தேதிவரை திரண்டுள்ள அதன்மீதான தண்டத்தையும் செலுத்துவதற்காகக் காலநீடிப்பொன்றை அவர் வழங்கலாமென்பதுடன் அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள் கொடுத்துதவப்பட்ட பற்றுச்சீட்டு, உட்பிரிவுகள் (1), (5) மற்றும் (6) என்பவற்றின் நோக்கங்களுக்காக, மேன்முறையீட்டுடன் இணைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(7) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் செய்யப்பட்டிராத அல்லது உட்பிரிவுகள் (3), (5) மற்றும் (6) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகாத ஒவ்வொரு மேன்முறையீடும் செல்லுபடியாதலாகாது.

(8) ஒரு செல்லுபடியான மேன்முறையீட்டைப் பெற்றதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதி, எந்த மதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த மதிப்பீட்டைச் செய்த உதவி ஆணையாளர் தவிர்ந்த வேறு ஓர் உதவி ஆணையாளரினால் மேலதிக விசாரணையொன்று நடாத்தப்படுவதனைச் செய்விக்கலாமென்பதுடன் அத்தகைய விசாரணையின்போது மேன்முறையீட்டில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பாக உடன்பாடொன்று எய்தப்படின், மதிப்பீட்டின் அவசியமான சரிக்கட்டுதல் செய்யப் படுதலும் வேண்டும்.

(9) உட்பிரிவு (8) இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் மேன்முறையீட்டாளருக்கும் உதவி ஆணையாளருக்குமிடையே உடன்பாடெதுவும் எய்தப்படாதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி மேன்முறையீட்டைக் கேட்பதற்கான ஒரு நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(10) மேன்முறையீட்டாளர் நேரடியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டவொரு பிரதிநிதிமூலமாக மேன்முறையீட்டின் கேட்புக்கு வருகைதரலாம். ஆணையாளர் தலைமையதிபதி, தகுதியென அவர் கருதினால், காலத்துக்குக்காலம், அவர் நிர்ணயிக்கவேண்டிய அத்தகைய நேரத்துக்கும் இடத்துக்கும் ஒரு மேன்முறையீட்டின் கேட்பை ஒத்திவைக்கலாம். மேன்முறையீட்டாளரின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் வருகைதருகின்ற ஏதேனும் விடயத்தில், ஆணையாளர் தலைமையதிபதி மேன்முறையீட்டின் கேட்பை ஒத்திவைக்கலாமென்பதுடன் மேன்முறையீட்டைத் தீர்மானிப்பதற்காக மேன்முறையீட்டாளரின் நேரடி வருகை அவசியமானதென அவர் கருதினால், மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் மேன்முறையீட்டாளர் நேரடியாக வருகைதருதல் வேண்டுமெனவும் தேவைப்படுத்தலாம்.

மேன்முறையீட்டாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, மேன்முறையீட்டின் கேட்புக்காக அல்லது ஏதேனும் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதரத் தவறினால், ஆணையாளர் தலைமையதிபதி மேன்முறையீட்டைத் தள்ளுபடிசெய்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மேன்முறையீட்டாளர், ஒரு மேன்முறையீடு தள்ளுபடிசெய்யப்பட்டபின்னர் நியாயமானவொரு காலத்தினுள் தான் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது அவரின் சுகவீனம் காரணமாக அல்லது வேறு நியாயமான காரணத்துக்காக அத்தகைய மேன்முறையீட்டின் கேட்புக்கு அல்லது ஏதேனும் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கு உரியமுறையில் வருகைதருவதிலிருந்து அவர் தடுக்கப்பட்டாரென ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்தினால், ஆணையாளர் தலைமையதிபதி தள்ளுபடிக் கட்டளையை வறிதாக்கலாமென்பதுடன் மேன்முறையீட்டைக் கேட்பதற்கான ஒரு நேரத்தையும் இடத்தையும் நிர்ணயிக்கலாம்.

(11) ஆணையாளர் தலைமையதிபதி, மேன்முறையீடு தொடர்பில் சான்றளிப்பதற்கு இயன்றவரென அவர் கருதக்கூடிய எவரேனுமாளை அவரின்முன்னர் வருகைதரும்படி அழைப்பதற்கும் சத்தியத்தின்மீது அல்லது வேறுவகையாக அத்தகைய ஆளை விசாரணைசெய்வதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும். அவ்வாறு வருகைதருகின்ற எவரேனுமாளுக்கு, அவ்வாறு வருகைதருவதில் அத்தகைய ஆளினால் அவசியமான முறையில் உறப்பட்ட எவையேனும் நியாயமான செலவுகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் அனுமதிக்கப்படலாம்.

(12) ஆணையாளர் தலைமையதிபதி–

(அ) ஏதேனும் மேன்முறையீட்டின்மீது அவரது தீர்மானத்தைச் செய்யுமுன்னர் அவ்வாறு செய்வது அவசியமானதென அவர் கருதினால், எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம்

கொடுக்கப்பட்ட அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எவையேனும் உறுதிகளை, வரைபடங்களை, சாதனங்களை, கணக்குப்புத்தகங் களை, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புக்களை, காசோலைகளை, பணஞ் செலுத்தும் நறுக்குகளை, கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை அல்லது தனதுடைமையிலுள்ள வேறு ஆவணங்களை ஆணையாளர் தலைமையதிபதிக்குப் பரிசோதனைக் காகக் காண்பிக்கும்படி, அல்லது அவருக்கு அனுப்பி வைக்கும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) மேன்முறையீடொன்றின் அத்தகைய கேட்பில் சம்பந்தப்பட்டுள்ள வழக்கெழுவினாக்களுடன் பரிச்சயமாகவுள்ள ஓர் ஆணையாளரின், ஒரு சிரேட்ட பிரதி ஆணையாளரின், ஒரு பிரதி ஆணையாளரின் அல்லது ஓர் உதவி ஆணையாளரின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

(13) மேன்முறையீடு தொடர்பில் மேன்முறையீட்டாளரின் அல்லது வேறெவரேனுமாளின் சான்றை ஆணையாளர் தலைமையதிபதி கேட்குமிடத்து, அத்தகைய சான்று பற்றிய பதிவேடொன்றை அவர் பேணுதல் வேண்டும் அல்லது பேணுவித்தல் வேண்டும்.

(14) இப்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைத் தீர்மானிக்கையில், ஆணையாளர் தலைமையதிபதி, எந்த மதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடுசெய்யப்படுகின்றதோ அந்த மதிப்பீட்டை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது வெற்றானதாக்கலாம் என்பதுடன் மேன்முறையீட்டின்மீது அவரது தீர்மானம்பற்றி மேன்முறையீட்டாளருக்கு எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகளின்மூலமான அறிவித்தலைக் கொடுத்தலும் வேண்டும்.

(15) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடும், அத்தகைய மேன்முறையீடுபற்றிய உடன்பாடு அல்லது தீர்மானம் பின்வருவனவற்றின் மீது தங்கியிருந்தாலொழிய, அத்தகைய மேன்முறையீடு எத்தேதியன்று ஆணையாளர் தலைமையதிபதியி னால் பெறப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றினுள் உடன்பட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும் அல்லது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அத்தகைய மேன்முறையீட்டுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட அல்லது அதிலிருந்து எழுகின்ற மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது மேன்முறையீட்டாளரினால் ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தின்மீது அதன் முடிபு; அல்லது

(ஆ) பின்வருவோரினால் ஏதேனும் ஆவணம் கொடுத்து தவப்படுதல் அல்லது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் படுதல்:-

(i) அத்தகைய மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் கொடுக்கப்பட்ட அறிவித்தல்மூலம், (ஆணையாளர் தலைமையதிபதியினால் எத்தேதியன்று மேன்முறையீடு பெறப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுறுமுன்னர் ஆறுமாதங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்) அவ்வாறு செய்யும்படி ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது ஓர் உதவி ஆணையாளரினால் தேவைப்படுத்தப்படு வதன்மேல் மேன்முறையீட்டாளரினால்; அல்லது

(ii) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஓர் உதவி ஆணையாளர் தவிர்ந்த வேறு எவரேனுமாளினால்.

(16) பதினைந்தாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, அறவீட்டைச் செலுத்துவதற்காக மேன்முறையீட்டாளரொருவருக்குக் காலநீடிப்பொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து, அறவீட்டின் செலுத்துகைக்கான எண்பிப்பாகப் பற்றுச்சீட்டுத் தேதியானது அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(17) ஏதேனும் மேன்முறையீடு (15) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் உடன்பட்டுக் கொள்ளப்படாதவிடத்து அல்லது தீர்மானிக்கப்படாதவிடத்து, மேன்முறையீடானது அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அறவீடு விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.

வரி மேன்முறையீட்டு ஆணைக் குழுவுக்கான மேன்முறையீடுகள்

**22.** இருபத்தோராம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தினால் இன்னலுறும் எவரேனுமாள் 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கு அத்தகைய தீர்மானத்துக்கெதிராக மேன்முறையீடுசெய்யலாம்.

மதிப்பீட்டின் இறுதியாந் தன்மை

**23.** (அ) ஒரு மதிப்பீட்டுக்கு அல்லது ஒரு மேலதிக மதிப்பீட்டுக்கு எதிராக இப்பாகத்தின்கீழ் செல்லுபடியான மேன்முறையீடெதுவும் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட்டிராதவிடத்து, அத்தகைய மதிப்பீடு அல்லது மேலதிக மதிப்பீடு; அல்லது

(ஆ) மேன்முறையீட்டின்மீது அறவீட்டுத்தொகையை ஆணையாளர் தலைமையதிபதி தீர்மானித்துள்ள விடத்து, அத்தகைய மேன்முறையீட்டின்மீது, விடயத்துக்கேற்ப, செய்யப்பட்ட, குறைக்கப்பட்ட, அதிகரிக்கப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட மதிப்பீடு,

இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் இறுதியானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், 15 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலவரையறைக்கமைய, இப்பிரிவிலுள்ளதெதுவும், மேன்முறையீட்டின்மீது ஏலவே தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் கருமத்தை அது உட்படுத்தாதிருப்பின், ஏதேனும் இயைபான காலாண்டுக்கான மதிப்பீடொன்றை அல்லது மேலதிக மதிப்பீடொன்றைச் செய்வதிலிருந்து ஓர் உதவி ஆணையாளரைத் தடுத்தலாகாது.

## பாகம் VII

## அறவீட்டை அறவிடுதல்

அறவீட்டை அறவிடுதல்

**24.** (1) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக "அறவீடு" என்பது, இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட தண்டத்தை உள்ளடக்குகின்றது.

(2) ஆணையாளர் தலைமையதிபதி 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின்கீழான சான்றிதழொன்றை அல்லது 29 ஆம் பிரிவின்கீழான அறிவித்தலொன்றை, விடயத்துக்கேற்ப, வழங்கும் அல்லது சமர்ப்பிக்கும்போதெல்லாம், அவர் அதேநேரத்தில் அதுபற்றிய அறிவிப்பொன்றை நேரடிச் சேர்ப்பித்தல்மூலம் அல்லது பதிவஞ்சல்மூலம் அல்லது தந்திமூலம் அல்லது இலத்திரனியல்

வழிவகைகள்மூலம் தவணைதவறியவருக்கு வழங்குதல் வேண்டும்; எவ்வாறாயினும், தவணைவறியவரினால் அத்தகைய அறிவிப்பு பெறப்படாமையானது இப்பிரிவின்கீழான வழக்குநடவடிக்கைகளைச் செல்லுபடியற்றனவாக்குதலாகாது.

அறவீடானது முதற் பொறுப்பாதல் வேண்டும்

**25.** தவணைதவறுகையிலுள்ள ஏதேனும் அறவீடு தவணைதவறியவரின் எல்லாச் சொத்துக்களின்மீதும் முதற்பொறுப்பொன்றாதல் வேண்டும்:

ஆயின்–

(அ) அத்தகைய பொறுப்பானது, 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, பெறுமதிக்காக நல்லெண்ணத்துடனான கொள்வனையாளரொருவருக்கு அத்தகைய ஆளினால் விற்பனைசெய்யப்பட்ட எவையேனும் சொத்துக்கள் கைப்பற்றப்படுமுன்னர் அவற்றுக்கு நீடித்தலோ அல்லது அவற்றைப் பாதித்தலோ ஆகாது;

(ஆ) அசைவற்ற ஆதனம் தொடர்பாக, பெறுமதிக்காக நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்டதும் கைப்பற்றுகைத் தேதிக்குமுன்னர் பதிவுசெய்யப்பட்டதுமான ஏதேனும் குத்தகைக்கு அல்லது பாரபந்தத்துக்கு அறவீடானது முன்னுரிமை கொண்டிருத்தலாகாது; அல்லது

(இ) அசைவுள்ள ஆதனம் தொடர்பாக, ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட இயைபான காலாண்டுகளுக்கான அறவீடானது தவணைதவறியதாகவுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியினால் தெரிவுசெய்யப்படவேண்டிய ஐந்தாண்டுகளினுள் மட்டுமேயான இயைபான காலாண்டுகளுக்கான அறவீடு, அத்தகைய அறவீடு தவணைதவறியதாகவந்த தேதிக்குமுன்னர் பெறுமதிக்காக நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்ட ஏதேனும் சோந்தைக்கு அல்லது பாரபந்தத்துக்கு முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

தவணை தவறிய வருக்கான அறிவித்தல்

**26.** (1) ஏதேனும் அறவீடு தவணைதவறியதாகவுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்கு முற்படுமுன்னர், பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலமான எழுத்திலான அறிவித்தலொன்றைத் தவணைதவறியவருக்கு வழங்குதல் வேண்டும்:-

(அ) அத்தகைய அறவீட்டின் விபரங்களும்; அத்துடன்

(ஆ) அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்கான நடவடிக்கை பற்றிச் சிந்திக்கப்படுகின்றதென்றும்.

(2) மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும், அத்தகைய அறவீடு எந்த மதிப்பீடுதொடர்பில் விதிப்பனவுசெய்யப்படுகின்றதோ அந்த மதிப்பீட்டுக்கெதிராகக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தவணைதவறியவர் மேன்முறையீடுசெய்திராதவிடத்தும், அவர், அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அவ்வாறு விதிப்பனவுசெய்யப்பட்ட அறவீடு தொடர்பான ஏதேனும் ஆட்சேபனையை ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதி, **34** ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆட்சேபனைகளைக் கவனத்துட்கொண்டு இறுதியானதாகவிருக்க வேண்டிய அவற்றின்மீதான தனது முடிபைக் கொடுத்தலும் வேண்டும்.

கைப்பற்றுகை மற்றும் விற்பனை மூலம் அறவீட்டை அறவிடுதல்

**27.** (1) ஏதேனும் அறவீடு தவணைதவறியதாகவுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய அறவீடு பற்றிய விபரங்களையும் தவணைதவறியவரின் பெயரையும் முகவரியையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை ஒரு பிரதேச செயலாளருக்கு, ஓர் உதவிப் பிரதேச செயலாளருக்கு, ஒரு பிசுக்காலுக்கு, ஒரு பிரதிப் பிசுக்காலுக்கு அல்லது ஓர் அறவீட்டுச் சேகரிப்பாளருக்கு வழங்கலாம்; அத்தகைய சான்றிதழ் எந்த அலுவலருக்கு வழங்கப்படுகின்றதோ அந்த அலுவலருக்கு, சான்றிதழிற் பெயர்குறிப்பிடப்பட்ட தவணைதவறியவரின் அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனைசெய்வதன்மூலம் அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய அறவீட்டை அறவிடுவதற்கு அல்லது அவ்வறவீடு அறவிடப்படுவதனைச் செய்விக்குமாறு தேவைப்படுத்துவதற்குத் தத்துவமளிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கைப்பற்றுகை, சொல்லப்பட்ட அலுவலர் அதற்கென மிக்க உசிதமானதெனக் கருதவேண்டிய அத்தகைய முறையில் பயனுறுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் ஆதனம், தவணைதவறியவரின் ஆகுசெலவுகளிலும் விதிப்பனவு களிலும் ஏழு நாட்களுக்கு வைத்திருக்கப்படுதலும் வேண்டும். தவணைதவறியவர், சொல்லப்பட்ட ஏழுநாட்களினுள் ஆகுசெலவுக ளுடனும் விதிப்பனவுகளுடனும் சேர்த்து தவணைதவறுகையிலுள்ள சொல்லப்பட்ட அறவீட்டைச் செலுத்துவதற்குத் தவறினால், விடயத்துக்கேற்ப, பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், பிசுக்கால், பிரதிப் பிசுக்கால் அல்லது அறவீட்டுச் சேகரிப்பாளர் அத்தகைய ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனை செய்வித்தல் வேண்டும்.

(3) விற்பனையினால் தேறிப்பெறப்பட்ட பணத்தொகையானது-

(i) முதலாவதாக ஆதனத்தைக் கைப்பற்றி, வைத்திருந்து, விற்பனை செய்வதற்கான ஆகுசெலவுகளையும் விதிப்பனவுகளையும் செலுத்துவதற்கும்; அத்துடன்

(ii) இரண்டாவதாகத் தவணைதவறுகையிலுள்ள அறவீட்டைக் கொடுத்துத்தீர்ப்பதற்கும்,

பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் மீதி தவணைதவறியவருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வழிவகைகள் மூலம் ஏதேனும் அறவீட்டை அறவிடுவது செயல்முறைக்குகந்ததல்ல அல்லது உசிதமானதல்ல என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அவர், அறவீடு பற்றிய அத்தகைய விபரங்களையும் தவணைதவறியவரின் பெயரையும் முகவரியையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை, தவணைதவறியவர் வதிகின்ற அல்லது தவணைதவறியவரினால் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் அமைந்துள்ள மாவட்டத்தில் நியாயாதிக்கங்கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்

துக்குச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் நீதிமன்றம் அதன்மேல், அறவீட்டை அறவிடுவதற்காகப் பிசுக்கால் அவசியமெனக் கருதக்கூடியவாறாகத் தவணைதவறியவரின் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனம் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அல்லது அதன் பாகத்தைக் கைபற்றி விற்பனை செய்வதற்கு அவருக்கு அதிகாரமளிக்கின்றதும் அவரைத் தேவைப்படுத்துகின்றதுமான நிறைவேற்றெழுத்தாணையொன்றை அவருக்கு வழங்கலாம்; அத்துடன் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 226 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "அசைவுள்ள ஆதனம்" என்பது, ஒரு கட்டிடத்துடன் பொருத்தப்பட்டதாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, பொறித்தொகுதியையும் எந்திரத்தொகுதியையும் உள்ளடக்குதல் வேண்டும்.

ஒரு நீதிவான் முன்னர் அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகள்

**28.** (1) தவணைதவறுகையிலுள்ள அறவீட்டைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அதனை அறவிடுதல் செயல்முறைக்கு கந்ததல்ல அல்லது உசிதமானதல்ல என ஆணையாளர் தலைமையதிபதி ஏதேனும் விடயத்தில் அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது தவணைவறுகையிலுள்ள அறவீட்டின் முழுத்தொகையும் அறவிடப்பட்டிராதவிடத்து, அத்தகைய அறவீட்டின் விபரங்களையும் தவணைதவறியவரின் பெயரையும் கடைசியாக அறியப்பட்ட தொழிலிடத்தையும் அல்லது வதிவிடத்தையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அவர் தவணைதவறியவரின் அத்தகைய தொழிலிடம் அல்லது வதிவிடம் எந்தப் பிரிவில் அமைந்துள்ளதோ அந்தப் பிரிவில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானொருவருக்குச் சமர்ப்பிக்கலாம்.

(2) (அ) நீதிவான் அதன்மேல், அறவீட்டை அறவிடுவதற்கான மேலதிக வழக்குநடவடிக்கைகள் அத்தகைய தவணை தவறியவருக்கெதிராக ஏன் எடுக்கப்படுதலாகாது என்பதுபற்றிக் காரணங்காட்டுவதற்குத் தன்முன்னர் அவரைக் கட்டளை விட்டழைத்தல் வேண்டும்.

(ஆ) போதிய காரணங்காட்டப்படின், தவணைதவறுகையிலுள்ள அறவீடு, குற்றப்பணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படற்பாலதான அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாத தவறொன்றுக்காக அத்தகைய தவணைதவறியவரின் மீது நீதிவானின் தண்டனைத்தீர்ப்பொன்றினால் விதிக்கப்பட்டவொரு குற்றப்பணமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகையவொரு தவறுக்காக விதிக்கப்பட்டவொரு குற்றப் பணத்தைச் செலுத்தத்தவறியமை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உப்பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகள் தவிர) அதன் மேல் ஏற்புடையனவாதலும் வேண்டும்; அத்துடன் நீதிவான் அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதித்த நேரத்தில் இவ்வுப்பிரிவின் ஏற்பாடுகளினால் அவர் விடுத்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்பை விடுக்கலாம்.

(இ) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாமாண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான பிரிவுகளிலுள்ளதெதுவும் இவ்வுப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில் ஏற்புடையதாதலாகாது.

(ஈ) இவ்வுப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், தவணைப்பணங்களில் குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கான காலத்தை நீதிவான் வழங்கலாம்.

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும், அதன் கீழான ஏதேனும் வழக்குநடவடிக்கையில், தவணைதவறுகையிலுள்ள அறவீடு எந்த மதிப்பீடு தொடர்பில் விதிப்பனவுசெய்யப்படுகின்றதோ அந்த மதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடொன்று முடிவுறாதுள்ளதென்ற நிகழ்வு காரணமாக மட்டும், ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழில் உள்ள ஏதேனும் கூற்றின் சரியானதன்மையைக் கவனத்துட்கொள்வதற்கு, பரிசோதனைசெய்வதற்கு அல்லது முடிபுசெய்வதற்கு அல்லது முப்பது நாட்களை விஞ்சுகின்றவொரு

காலப்பகுதிக்கு அத்தகைய வழக்குநடவடிக்கையைப் பின்போடு வதற்கு அல்லது தள்ளிப்போடுவதற்கு நீதிவானுக்கு அதிகார மளித்தலோ அல்லது அவரைத் தேவைப்படுத்துதலோ ஆகாது.

(4) குற்றப்பணத்தைச் செலுத்துவதற்காகக் காரணங்காட்டுவதற்கு (2) ஆம் உட்பிரிவின் கீழ் காலத்தை அனுமதிக்கின்ற முந்நிபந்தனையொன்றாகப் பிணைவழங்குவதற்கு நீதிமன்றம் தேவைப்படுத்தப்படலாமென்பதுடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XXXIV இன் ஏற்பாடுகள், தவணைதவறியவருக்கு அவ்வாறு பிணைவழங்குவது தேவைப்படுத்தப்படுமிடத்து ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் குற்றப் பணத்தின் கொடுப்பனவைத் தவணைப் பணங்களில் செலுத்தும் படி பணிக்கப்படுமிடத்தும், ஏதேனுமொரு தவணப்பணக் கொடுப்பனவில் தவணைதவறுகை புரியப்படுமிடத்தும், அப்போது செலுத்தப்படாதெஞ்சியுள்ள எல்லாத் தவணைப்பணங்களினதும் கொடுப்பனவில் தவணைதவறுகை புரியப்பட்டிருந்தது என்றாற்போன்று அதே வழக்குநடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

தனிசுகளிலிருந்து அறவீட்டை அறவிடுதல்

**29.** (1) எவரேனுமாளினால் செலுத்தப்படற்பாலதான அறவீடு தவணைதவறுகையிலுள்ளவிடத்தும், எவரேனுமாள்-

(அ) தவணைதவறியவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணஞ்செலுத்தவேண்டியவரென்பது அல்லது பணஞ்செலுத்தும் தவறுவாயிலுள்ளவரென்பது;

(ஆ) தவணைதவறியவருக்காக அல்லது அவரது முகவருக்காக அல்லது அவரது கணக்கால் பணம் வைத்திருப்பவரென்பது;

(இ) தவணைதவறியவருக்கு அல்லது அவரது முகவருக்குக் கொடுப்பனவுசெய்வதற்காக வேறெவரேனுமாளுக் காக அல்லது அவரது கணக்கால் பணம் வைத்தி ருத்திருப்பவரென்பது; அல்லது

(ஈ) தவணைதவறியவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணஞ்செலுத்துவதற்கு வேறெவரேனுமாளிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளவரென்பது,

நிகழ்தகவாக இருக்கின்றதென ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றுமிடத்தும், ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமான அறிவித்தலொன்றை (அதன் பிரதியொன்று தவணைதவறியவருக்கு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்) அத்தகைய அறிவித்தலில் பெயர்குறிப்பிடப்பட்ட அலுவலருக்குத் தவணைதவறுகையிலுள்ள அறவீட்டுத்தொகையை விஞ்சாத அத்தகைய எவையேனும் பணங்களைச் செலுத்தும்படி அவரைத் தேவைப்படுத்தி அத்தகைய ஆளுக்குக் கொடுக்கலாம்.

(2) அறிவித்தல் பெறப்பட்ட தேதியில் அத்தகைய ஆளின் கைவசமுள்ள அல்லது அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான அல்லது அத்தகைய அறிவித்தல் தேதிக்குப்பின்னர் மூன்று மாதகாலப்பகுதியினுள் எந்நேரத்திலும் அவர் கைவசம் வருகின்ற அல்லது அவரிடமிருந்து வருமதியாக வருகின்ற அல்லது அவரினால் செலுத்தப்படும் தறுவாயிலுள்ள அத்தகைய எல்லாப் பணங்களுக்கும் அத்தகைய அறிவித்தல் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் கொடுப்பனவைச் செய்துள்ள எவரேனுமாள், தவணைதவறியவரினதும் சம்பந்தப்பட்ட வேறெல்லா ஆட்களினதும் அதிகாரத்தின்கீழ் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின், ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய கொடுப்பனவுதொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகளுக்கெதிராகவும் அவருக்கு இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாள், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியினுள் சம்பந்தப்பட்ட பணங்கள்

அவரது கைவசம் அல்லது கட்டுக்காப்பினுள் வருவதில்லை அல்லது அவரிடமிருந்து வருமதியாக வருவதில்லையென்ற நிகழ்வு காரணமாக அதனோடு இணங்கியொழுகுவதற்கு இயலாதவராக விருக்குமிடத்து, அவர், அது முடிவுற்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள், நிகழ்வுகள் பற்றி எடையீடுசெய்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாள் அதனோடு இணங்கியொழுகுவதற்கு இயலாதிருந்து (4) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுப்பதற்குத் தவறியுள்ளவிடத்து அல்லது அத்தகைய ஆள், அறிவித்தலானது எந்த அறவீடு தொடர்பானதோ அந்த அறவீட்டை அல்லது அதன் பாகத்தைக் கழித்துள்ளவிடத்தும் அல்லது கழித்திருக்கக்கூடியவிடத்தும் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி முடிவுற்றபின்னர் பதினான்கு நாட்களினுள் அத்தகைய அறவீட்டுத்தொகையை அல்லது அதன் பாகத்தைச் செலுத்தியிராதவிடத்தும், அத்தகைய ஆள், அவர் ஒரு தனியாளாக இருப்பின் பொறுப்பாதல் வேண்டும் அல்லது அத்தகைய ஆள், கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஒரு கம்பெனியாக அல்லது ஆட்கள் குழுவாகவிருக்குமிடத்து, அத்தகைய கம்பெனியின் அல்லது குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது பிரதான அலுவலர், அத்தகைய ஆள் கழிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அறவீட்டின் முழுமைக்கும் நேரடியாகப் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறவீடு, இச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட எல்லா வழிவகைகள்மூலமும், விடயத்துக்கேற்ப, அத்தகைய தனியாளிட மிருந்து, செயலாளரிடமிருந்து, முகாமையாளரிடமிருந்து அல்லது வேறு பிரதான அலுவலரிடமிருந்து அறவிடவும்படலாம்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தவணைதவறியவர்'' என்னும் சொல்லமைப்பு, தவணைதவறுகையிலுள்ள ஆளொரு வரின் முகவரொருவரை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இப்பிரிவின் ஏற்பாடுகள், எவரேனுமாள்

உயிரோடிருந்திருப்பின் அவரினால் செலுத்தப்படற்பாலதாக விருந்திருக்கக்கூடிய அறவீடு தவணைதவறியதாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில் ஏற்புடையனவாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் விடயத்தில் இவ்வேற்பாடுகளை ஏற்புடையன வாக்கும் நோக்கத்துக்காக, (1) ஆம் உட்பிரிவில், "தவணைதவறிய வர்" என்னும் சொல்லமைப்பு, பின்வருவோரெனப் பொருளாகும்:-

(அ) அத்தகைய இறந்த ஆளின் நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி; அல்லது

(ஆ) அத்தகைய இறந்த ஆளின் ஆதனத்தை உடைமை கொள்கின்ற அல்லது அதனோடு இடைக்கலப்புச் செய்கின்ற எவரேனுமாள்; அல்லது

(இ) அத்தகைய இறந்த ஆளின் மரணச்சொத்துத் தொடர்பில் மரணசாதன அதிகாரப்பத்திரத்தை அல்லது மரணச்சொத்து நிருவாகத்தத்துவப்பத்திரங்களின் வழங்குகைக்காக அல்லது மீள இலச்சினையிடுகைக்காக ஒரு மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பிப்பதற்கு உரித்துள்ள எவரேனு மாள்.

இலங்கையை விட்டுச் செல்லும் ஆட்களிடமிருந்து அறவீட்டை அறவிடுதல்

**30.** (1) எவரேனுமாள், அவரிடமிருந்து வருமதியான அறவீட்டைச் செலுத்தாமல் இலங்கையை விட்டுச்செல்லும் தறுவாயிலுள்ளார் அல்லது விட்டுச்செல்லும் சாத்தியமுள்ளது என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய அறவீட்டின் விபரங்களையும் அத்தகைய ஆளின் பெயரையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை நீதிவானொருவருக்குச் சமர்ப்பிக்கலாம்; அவர் அதனைப் பெற்றதன் மீது, அறவீட்டைச் செலுத்தாமல் அல்லது அதன் செலுத்துகைக்காக ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்குப் பிணைப்பொறுப்பைக் கொடுக்காமல் அத்தகைய ஆள் இலங்கையை விட்டுச்செல்வதனைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுக்கும்படி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குப் பணிப்பொன்றை வழங்கலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, நீதிவானுக்குச் சான்றிதழைச் சமர்ப்பிக்கும் நேரத்தில், நேரடிச் சேர்ப்பிப்பு அல்லது பதிவஞ்சல் அல்லது தந்தி அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் அதுபற்றிய அறிவிப்பொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும் ஆனால் அத்தகைய ஆளினால் அத்தகைய ஏதேனும் அறிவிப்பு பெறப்படாமை, இப்பிரிவின்கீழான வழக்குநடவடிக்கைகளைச் செல்லுபடியற்றனவாக்குதலாகாது.

(3) அறவீடானது செலுத்தப்பட்டுள்ளது அல்லது அறவீட்டின் செலுத்துகைக்காகப் பிணைப்பொறுப்பு கொடுத்துதவப்பட்டுள்ளது அல்லது அறவீடானது ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவருக்குச் செலுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு ஆணையாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழொன்று காண்பிக்கப்படுதலானது அத்தகைய ஆள் இலங்கையை விட்டுச்செல்வதனை அனுமதிப்பதற்கான போதிய அதிகாரமாதல் வேண்டும்.

(4) அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அறவீட்டுத்தொகை எந்தப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் அலுவலருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அலுவலர் அத்தகைய தொகையை உடனடியாக ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

அறவீட்டை அறவிடுவதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட வழிவகைகளைப் பயன்படுத்துதல்

**31.** எவரேனும் ஆளிடமிருந்து வருமதியான முழு அறவீட்டுத் தொகையினதும் செலுத்துகையைப் பெறுவதற்கு இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட அறவிடுவதற்கான வழிவகைகளுள் ஏதேனுமொன்றின் பயன்பாடு தவறியுள்ளது அல்லது தவறுவதற்கான சாத்தியத்தைக்கொண்டது என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அவர் செலுத்தப்படாதெஞ்சியுள்ள ஏதேனும் பணத்தொகையை இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் அறவீட்டு வழிவகைகள்மூலம், 28 ஆம் பிரிவின்கீழ் நீதிவானொருவரினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டு பயனுடைய தாக்கப்பட்டுள்ளது என்பது எவ்வாறிருப்பினும், அறவிடுவதற்கு முற்படலாம்.

பிரதான அலுவலர் மற்றும் ஏனையோரிடமிருந்து அறவீட்டை அறவிடுதல்

**32.** (1) பதினேழாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று ஏதேனும் அறவீட்டைச் செலுத்தியிராதவிடத்து அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு முகாமையாளர், பணிப்பாளர், செயலாளர் அல்லது வேறெவரேனும் பிரதான அலுவலர் அத்தகைய தவணைதவறுகைக்குப் பொறுப்பாகவுள்ளார் என்றாற்போன்று, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுதொடர்பான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு அவர் முரணானதை எண்பித்தாலொழிய, அத்தகைய அலுவலருக்கெதிராக இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லாவற்றின்கீழும் அல்லது எவற்றின்கீழும் மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்று 17 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் அறவீட்டைச் செலுத்தியிராதவிடத்து, அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் எவரேனும் பங்காளர் அல்லது பதவிதாங்குநர் அத்தகைய தவணைதவறுகைக்குப் பொறுப்பாகவுள்ளார் என்றாற்போன்று, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு முரணானதை அவர் எண்பித்தாலொழிய, அவருக்கெதிராக இச்சட்டத்தின் எல்லா அல்லது அவற்றுள் எவையேனும் ஏற்பாடுகளின்கீழ் மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

அறவீட்டை அறவிடுவதற்காகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்

**33.** ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் எவரேனுமாளுக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலினால் அத்தகைய ஆளிடமிருந்து அல்லது வேறேவரேனுமாளிடமிருந்து வருமதியான ஏதேனும் அறவீட்டை அறவிடும் நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக்கூடியவாறான எவையேனும் தகவல்களை அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் கொடுத்துதவும்படி அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்.

*தவணை தவறுகையிலுள்ள அறவீடொன்றை அறவிடுவதற்கான காலவரையறை*

***34.*** தவணைதவறுகையிலுள்ள அறவீடு எந்த மதிப்பீட்டின்மூலம் விதிக்கப்பட்டதோ அல்லது அறவிடப்பட்டதோ அந்த மதிப்பீடு 23 ஆம் பிரிவின்கீழ் இறுதியானதாகவும் முற்றானதாகவும் வருகின்ற இயைபான காலாண்டின் முடிவிலிருந்து மூன்றுமாதங்கள் பூர்த்திசெய்யப்பட்டதிலிருந்து ஐந்தாண்டுக்காலப்பகுதியொன்று கழிந்துள்ளவிடத்து அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்காக ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் 27, 28, 29 மற்றும் 32 ஆம் பிரிவுகளின்கீழான ஏதேனும் வழக்குநடவடிக்கையைத் தொடங்குதலாகாது.

*ஆணையாளர் தலைமையதிபதி தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தல்*

***35.*** (1) ஆணையாளர் தலைமையதிபதி, அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம், இப்பாகத்தினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் எவரேனும் உதவி ஆணையாளருக்குக் கையளிக்கலாம்.

(2) ஏதேனும் தத்துவம் அல்லது பணி (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த உதவி ஆணையாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும் ஆணையாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

*விஞ்சுதலாகச் செலுத்தப்பட்ட அறவீடு அல்லது தண்டம் ஒரு முற்பணக் கொடுப்பனவாகக் கொள்ளப் படுதல்*

***36.*** ஏதேனும் இயைபான காலாண்டுக்காக எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் எந்தத் தொகையினதான அறவீட்டை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு ஆளாகவிருந்தாரோ அந்தத் தொகையினதான ஏதேனும் அறவீட்டுக்கு அல்லது தண்டத்துக்கு விஞ்சுதலான தொகையை அவர் செலுத்தியிருப்பின், அத்தொகையானது, இயைபான காலாண்டை அடுத்துப்பின்வரும் ஏதேனும் காலாண்டுக்காகச் செலுத்தப்பட்ட முற்பணக்கொடுப்பனவாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பாகம் VIII

## அறவீட்டைச் செலுத்துவதற்குக் குறித்தசில ஆட்களின் பொறுப்பு

அறவீட்டை செலுத்து வதற்கு நிறைவேற்று நரின் பொறுப்பு

**37.** (1) அறவீடு விதிக்கப்படற்பாலவரான எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள் இறக்குமிடத்து, அத்தகைய இறந்த ஆளின் நிறைவேற்றுநர், அத்தகைய ஆள் இறக்கும் தேதிக்குமுன்னரான எல்லா இயைபான காலாண்டுகளும் தொடர்பில், அத்தகைய ஆள் உயிரோடிருந்திருப்பின் அவர் எந்த அறவீடு விதிக்கப்படற் பாலவராக இருந்திருப்பாரோ அந்த அறவீடு விதிக்கப்படற் பாலவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் உயிரோடிருந்திருப்பின் இச்சட்டத்தின்கீழ் அவர் எந்தச் செயல்களை, கருமங்களை மற்றும் காரியங்களைச் செய்வதற்கு ஆளாக விருந்திருப்பாரோ அந்த எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கு ஆளாதலும் வேண்டும்:

ஆயின் -

(அ) இறந்த ஆளின் ஏதேனும் செயல் அல்லது வழக்குத் தவறுகை தொடர்பில் நிறைவேற்றுநருக்கெதிராக வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படு தலாகாது;

(ஆ) இறப்பானது இயைபான எந்தக் காலாண்டில் இடம் பெற்றதோ இயைபான அந்தக் காலாண்டின் முடிவி லிருந்து மூன்றாண்டுகளுக்குப்பின்னர், அத்தகைய ஆளின் இறப்புத் தொடர்பில் மதிப்பீடெதுவும் அல்லது மேலதிக மதிப்பீடெதுவும் செய்யப்படுதலாகாது; அத்து டன்

(இ) இப்பிரிவின்கீழ் நிறைவேற்றுநரின் பொறுப்பு-

(i) இப்பிரிவின்கீழ் அறவீட்டுக்கான பொறுப்பு எழுமென அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்

படும் தேதியில் அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள இறந்த ஆளின் மரணச்சொத்தின்; அத்துடன்

(ii) ஒரு பயனுகரியைச் சென்றடைந்திருக்கக்கூடிய மரணச்சொத்தின் ஏதேனும் பாகத்தின்,

பணத் தொகைக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(2) இறந்துள்ள ஆளொருவரின் மரணச்சொத்தின் சார்பில் நிறைவேற்றுநரொருவர், அத்தகைய மரணச்சொத்தின் பாகமாக வுள்ள ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துமிடத்து, அத்தகைய நிறைவேற்றுநர், அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடுதொடர்பில், அத்தகைய ஆள் உயிரோடிருந்திருப்பின் அவருக்கு விதிக்கப்படற்பாலதாக இருந்திருக்கும் அறவீடு விதிக்கப்படற்பாலவராதல் வேண்டும்.

**குறித்தசில ஆட்களுக்குச் சொந்தமாக விராதவொரு வரிவிதிக்கப் படற்பாலதான செயற்பாடு தொடர்பில் அறவீட்டைச் செலுத்துவதற்கு அவர்களுக் குள்ள பொறுப்பு**

**38.** (1) எந்த வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பில் அறவீடு செலுத்தப்படற்பாலதாக உள்ளதோ அந்த ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு வேறெவரேனுமாளின் முகவராக அத்தகைய வேறு ஆளின் சார்பில் எவரேனுமாளினால் கொண்டுநடாத்தப்படுமிடத்து அல்லது நிறைவேற்றப்படுமிடத்து, இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆள், இச்சட்டத்தின் கீழ் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆள் விதிக்கப்படற்பாலவராக இருக்கும் அதேமுறையிலும் அதே தொகைக்கும் அந்த வரிவிதிக்கப் படற்பாலதான செயற்பாடு தொடர்பில் அறவீடு விதிக்கப்படற் பாலவராதல் வேண்டும்.

(2) இலங்கையில் அல்லது இலங்கையிலிருந்து பெறப்பட்ட வதிவற்ற ஆளொருவரின் பொறுப்புக்குட்பட்ட மொத்தவிற்பனை வரவு எல்லாம், ஒன்றில் நேரடியாக அல்லது அவரது முகவரின் பெயரில், அத்தகைய முகவர் அத்தகைய மொத்தவிற்பனைவரவின் பற்றுச்சீட்டை வைத்திருந்தாலுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, மதிப்பிடப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் நேரடியாக வாயினுஞ்சரி அல்லது முகவரின் பெயரிலாயினுஞ்சரி அவ்வாறு

மதிப்பிடப்பட்ட இச்சட்டத்தின் நியதிகளின்படியான அறவீடு, வதிவற்ற ஆளின் சொத்துக்களிலிருந்து அல்லது முகவரிடமிருந்து இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அறவிடப்படற் பாலதாதலும் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட முகவர்கள் இருக்குமிடத்து, வதிவற்ற ஆளின் பொறுப்புக்குட்பட்ட மொத்தவிற்பனைவரவு தொடர்பில் அவர்கள் கூட்டாக அல்லது தனித்தனியாக மதிப்பீடுசெய்யப்படலாமென்பதுடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி, அதன்மீதான அறவீட்டுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாதலும் வேண்டும்.

*நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் நிறைவேற்றுநர்களும்*

**39.** இறந்த ஆளொருவரின் மரணச்சொத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களென்ற அல்லது நிறைவேற்றுநர்களென்ற தன்மையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் செயலாற்றுமிடத்து, இச்சட்டத்தின்கீழ் அவர்கள் எந்த அறவீடு விதிக்கப்படற்பாலவர்களாக உள்ளனரோ அந்த அறவீடு கூட்டாகவும் தனித்தனியாகவும் அவர்களிடமிருந்து விதிக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய அறவீட்டைச் செலுத்துவதற்கு அவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதலும் வேண்டும்.

*ஒரு கம்பெனி ஒழித்துக் கட்டப்படுவதன் மேல் அல்லது ஓர் ஆட்கள் குழு கலைக்கப் படுவதன்மேல் அறவீட்டைச் செலுத்துவதற்குப் பொறுப்பாக வுள்ள ஆட்கள்*

**40.** (1) இரண்டாயிரத்து ஏழாமாண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், கம்பெனியொன்று ஒடுக்கப்படுமிடத்தும் அக்கம்பெனி உட்பட்டதாகவுள்ள ஏதேனும் அறவீட்டை அறவிடமுடியாதிருக்குமிடத்தும், அப்போது, அத்தகைய அறவீடு எக்காலப்பகுதி தொடர்பில் செலுத்தப்படற்பாலதாக வுள்ளதோ அக்காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் கம்பெனியின் பணிப்பாளராகவிருந்த ஒவ்வோராளும், அறவீட்டைச் செலுத்துவதிலான தவணைதவறுகை கம்பெனியின் அலுவல்கள் தொடர்பாக அவர்பாலான ஏதேனும் பாரிய அசட்டை, நெறிகெட்ட நடத்தை அல்லது கடமைப் பிறழ்வுக்கு ஏற்றிக்கூறப்படமுடியாதென அத்தகைய ஆள் எண்பித்தாலொழிய, அத்தகைய அறவீட்டைச் செலுத்துவதற்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டுமென்பதுடன் அறவீட்டைச் சேகரித்தலும் அறவிடுதலும் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(2) ஆட்கள் குழுவொன்று கலைக்கப்படுமிடத்தும் அவ்வாட்கள் குழு எந்த அறவீட்டுக்கு உட்பட்டதாகவுள்ளதோ அந்த அறவீட்டை அறவிடமுடியாதுள்ளவிடத்தும், அப்போது, அத்தகைய அறவீடு எக்காலப்பகுதி தொடர்பில் செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அக்காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் அத்தகைய ஆட்கள் குழுவின் பங்காளராக அல்லது பதவிதாங்குநராகவிருந்த ஒவ்வோராளும், அறவீட்டைச் செலுத்துவதிலான தவணைதவறுகை அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் அலுவல்கள் தொடர்பாக அவர்பாலான ஏதேனும் பாரிய அசட்டை, நெறிகெட்ட நடத்தை அல்லது கடமைப் பிறழ்வுக்கு ஏற்றிக்கூறப்படமுடியாதென அவர் எண்பித்தாலொழிய, அத்தகைய அறவீட்டைச் செலுத்துவதற்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டுமென்பதுடன் அறவீட்டைச் சேகரித்தலும் அறவிடுதலும் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**41.** எவரேனுமாளினால் செய்யப்படுவதற்கு இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியம், அத்தகைய ஆள் உடற்றகுதியீனத்துக்குட்பட்ட ஆளொருவராகவிருப்பின், அத்தகைய உடற்றகுதியீனத்துக்குட்பட்ட ஆளின் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்.

*உடற்றகுதியீனத் துக்குட்பட்ட ஆட்களுக்காக யார் செயலாற்ற லாமென்பது*

**42.** எவரேனுமாளினால் செய்யப்படுவதற்கு இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியம், பங்காண்மையிலுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களின் விடயத்தில், அத்தகைய பங்காண்மையின் முந்துரிமைப் பங்காளரினால் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்:

*பங்காண்மை யின் சார்பில் முந்துரிமைப் பங்காளர் செயலாற்ற வேண்டும்*

ஆயின், ஒரு பங்காண்மையின் முந்துரிமைப் பங்காளரென்ற முறையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவ்வாளுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாள், அவர் அத்தகைய பங்காண்மையின் பங்காளர் ஒருவரல்ல அல்லது இலங்கையிலுள்ள வேறெவரேனுமாள் அதன் முந்துரிமைப் பங்காளராகவுள்ளாரென அவர் எண்பித்தாலொழிய, அதன் முந்துரிமைப் பங்காளராகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒரு கம்பெனியின் அல்லது ஆட்கள் குழுவின் சார்பில் பிரதான அலுவலர் செயலாற்றுதல் வேண்டும்

**43.** (1) ஒவ்வொரு கம்பெனியினதும் அல்லது ஆட்கள் குழுவினதும் செயலாளர், முகாமையாளர், பணிப்பாளர் அல்லது வேறு பிரதான அலுவலர், அத்தகைய கம்பெனியினால் அல்லது ஆட்கள் குழுவினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் அல்லது காரியங்களையும் செய்வதற்குப் பொறுப்பாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஒரு கம்பெனி அல்லது ஆட்கள் குழு சார்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ள எவரேனுமாள், அவர் அத்தகைய கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் எத்தொடர்பையும் கொண்டிருக்கவில்லை அல்லது இலங்கையில் வதிகின்ற வேறெவரேனுமாள் அதன் பிரதான அலுவலராகவுள்ளாரென அவர் எண்பித்தாலொழிய, அதன் பிரதான அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஒரு கம்பெனியினால் அல்லது ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் கம்பெனியின் அல்லது ஆட்கள் குழுவின் செயலாளராக, முகாமையாளராக, பணிப்பாளராக அல்லது வேறு பிரதான அலுவலராக இருந்த ஆளொவ்வொருவரும், தவறுகை தான் அறியாமல் புரியப்பட்டது என்றும் மற்றும் அத்தகைய பதவியில் அவரது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்க வேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக்கவனத்தையும் தான் பிரயோகித்தார் என்றும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IX

## தவறுகளும் தண்டங்களும்

இரகசியம் பற்றிய பிறழ்வு முதலியன தொடர்பான தவறுகள்

**44.** (அ) சத்தியமொன்றைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப் பட்ட ஆளொருவராகவிருந்து 58 ஆம் பிரிவின்கீழ் இரகசியம் பற்றிய சத்தியமொன்றைச் செய்வதற்கு அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது சத்திய மொன்றைச் செய்யத்தவறுகின்ற;

(ஆ) 58 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் முரணாகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனுமாளுக்கு உதவுகின்ற, உடந்தையாகவிருக்கின்ற அல்லது அவரைத் தூண்டுகின்ற,

ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

மோசடி தொடர்பான தவறுகள்

**45.** (அ) ஏதேனும் கேள்விக்கு வாய்மொழிமூலமாக அல்லது எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகவல்களைக் கொடுத்துதவும்படி கோரப்படும்போது ஏதேனும் பொய்யான மறுமொழியைக் கொடுக்கின்றவரும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டவொரு விபரத்திரட்டில் அவர் உள்ளடக்கியிருக்கவேண்டிய எவையேனும் விபரங்களை அத்தகைய விபரத்திரட்டிலிருந்து விட்டுவிடுகின்றவரும்;

(இ) இச்சட்டத்தின்கீழ் விபரத் திரட்டில் ஏதேனும் பொய்யான விபரத்திரட்டைத் தயாரிக்கின்றவரும் அல்லது தயாரிக்கப்பட்ட ஏதேனும் பொய்யான பதிவீட்டைச் செய்கின்றவரும்;

(ஈ) இயங்கலைப் பதிவுக்காகப் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றவரும், பதிவுக்காகப் பிழையான தகவல்களைப் பதிவேற்றுகின்றவரும் அல்லது

அரசிறை நிருவாகம் மற்றும் முகாமைத் தகவல் முறைமையின்கீழ் அனுமதிக்கப்பட்ட இலத்திரனியல் கோப்பிடுதல் முறைமையின்கீழ் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றவரும்,

அதன்மூலம் அறவீட்டைத் தட்டிக்கழிக்கின்றவரும் அல்லது தட்டிக்கழிக்க எத்தனிக்கின்றவரும் அல்லது அறவீட்டைத் தட்டிக்கழிப்பதற்கு அல்லது தட்டிக்கழிக்க எத்தனிப்பதற்கு வேறெவரேனுமாளை உதவுகின்றவருமான எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் பின்வருவனவற்றைக் கொண்டுள்ள குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்:-

(i) தவறானது எந்த இயைபான காலாண்டு தொடர்பில் புரியப்பட்டதோ அந்த இயைபான காலாண்டுக்காக இச்சட்டத்தின்கீழ் அவர் ஆளாகவுள்ளவரும் அவ்வாறு தட்டிக்கழிக்கப்பட்டதும் அல்லது தட்டிக்கழிக்க எத்தனிக்கப்பட்டதுமான அறவீட்டுத்தொகையின் இருமடங்குகளுக்குச் சமமானவொரு பணத்தொகையும்; அத்துடன்

(ii) இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு பணத் தொகை அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையில் ஒருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டும்.

**விபரத் திட்டுக்கள் முதலியன தொடர்பான தவறுகள்**

**46.** (அ) 9 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாகப் பதிவுக்காக விண்ணப்பிப்பதற்குத் தவறுகின்ற;

(ஆ) 7 ஆம் பிரிவின்கீழ் அறிவிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் கருமங்கள் பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கத் தவறுகின்ற;

(இ) 8 ஆம் பிரிவின்கீழ் விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவத்தவறுகின்ற;

(ஈ) 14 ஆம் பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கிணங்கியொழுக உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அலுவலரொருவர் முன்னர் தோன்றியிருந்து, போதிய காரணமின்றி, இச்சட்டத்தின்கீழ் செயலாற்றுகின்ற அலுவலரொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு மறுமொழியிறுக்கத் தவறுகின்ற;

(உ) அறவீட்டுக்கான அவரது சொந்தப் பொறுப்பு அல்லது வேறெவரேனுமாளின் பொறுப்பு சம்பந்தமான ஏதேனும் கருமம் அல்லது காரியம் தொடர்பாக ஏதேனும் பிழையான தகவலைக் கொடுக்கின்ற;

(ஊ) அறிவித்தலில் பெயரிடப்பட்ட அலுவலர் தவிர்ந்த வேறு அலுவலருக்கு 29 ஆம் பிரிவின்கீழான தொகையைச் செலுத்துகின்ற;

(எ) 51 ஆம் அல்லது 52 ஆம் பிரிவின்கீழ் அவரது தத்துவத்தைப் பிரயோகிப்பதில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது வேறெவரேனும் அலுவலருக்கு வேண்டுமென்று முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அவரைத் தாமதப்படுத்துகின்ற; அல்லது

(ஏ) 53 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவேடுகளைப் பேணத்தவறுகின்ற,

ஒவ்வோர் ஆளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**குற்றவழக்கு ஆணையாளர் தலைமையதிபதியின் வலுவளிப்புடனானதாக இருத்தல் வேண்டும்**

**47.** இப்பாகத்தின் கீழான தவறொன்று தொடர்பிலான குற்றவழக்கெதுவும், ஆணையாளர் தலைமையதிபதியின் தூண்டுதலின்பேரில் தவிர அல்லது அவரின் வலுவளிப்புடன்தவிர, தொடங்கப்படுதலாகாது.

**தவறுகளை இணக்குதல்**

**48.** ஆணையாளர் தலைமையதிபதி, திறத்தவர்களின் சம்மதத்துடனும் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டும், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட அதிகபட்சக் குற்றப்பணத்தின் மூன்றிலொரு பங்கை விஞ்சாதவொரு பணத் தொகைக்காக அத்தகைய தவறை இணக்கலாம். இப்பிரிவின்கீழ் ஒரு தவறை இணக்குவதில் ஆணையாளர் தலைமையதிபதியினாற் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் X

## நானாவிதமானவை

**கையொப்பமும் அறிவித்தலைச் சேர்ப்பித்தலும்**

**49.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு பிரதி ஆணையாளர் தலைமையதிபதி, சிரேட்ட ஆணையாளர், ஆணையாளர், சிரேட்ட பிரதி ஆணையாளர், பிரதி ஆணையாளர் அல்லது ஓர் உதவி ஆணையாளர் என்போரினால் இச்சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய ஒவ்வோர் அறிவித்தலும், விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தவைமையதிபதியின், பிரதி ஆணையாளர் தலைமையதிபதியின், சிரேட்ட ஆணையாளரின், ஆணையாளரின், சிரேட்ட பிரதி ஆணையாளரின், பிரதி ஆணையாளரின் அல்லது ஓர் உதவி ஆணையாளரின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வோர் அறிவித்தலும், ஆணையாளர் தலைமையதிபதியின், பிரதி ஆணையாளர் தலைமையதிபதியின், சிரேட்ட ஆணையாளரின், ஆணையாளரின், சிரேட்ட பிரதி ஆணையாளரின், பிரதி ஆணையாளரின் அல்லது உதவி ஆணையாளரின் பெயர் அதன்மீது முறையாக அச்சிடப்படின் அல்லது கையொப்பமிடப்படின், செல்லுபடியுடையதாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் பயனைக்கொண்டு கொடுக்கப்பட்ட ஒவ்வோர் அறிவித்தலும், ஆளொருவரின் கடைசியாக அறியப்பட்ட வாழிடத்தில் அல்லது அவர் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடாத்துகின்றவராகவுள்ள அல்லது நிறைவேற்றுகின்றவராகவுள்ள ஏதேனுமிடத்தில் அல்லது அறிவித்தல் தொடர்புபட்ட காலப்பகுதியின்போது கொண்டுநடாத்திய அல்லது நிறைவேற்றிய ஏதேனுமிடத்தில் ஒன்றில் நேரடியாக, இலத்திரனியல் வழிவகைகளினால் ஒப்படைக்கப்படுவதன்மூலம் அல்லது அஞ்சலில் அனுப்பப்படுவதன்மூலம் அவருக்குச் சேர்ப்பிக்கப்படலாம்.

(3) அஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட ஏதேனும் அறிவித்தல், அஞ்சலின் சாதாரண நெறியின்போது அது பெறப்பட்டிருக்கக்கூடிய நாளன்று சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அஞ்சலின்மூலம் சேர்ப்பிப்பை எண்பிப்பதில் அறிவித்தலை அடக்கிய கடிதம் முறையாக முகவரியிடப்பட்டு அஞ்சலிலிடப்பட்டதென்பதை எண்பிப்பது போதியதாகவிருத்தல் வேண்டும்.

**மதிப்பீடுகளின் செல்லுபடியாந்தன்மை**

**50.** (1) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் அறிவித்தல், மதிப்பீடு, சான்றிதழ் அல்லது வேறு வழக்குநடவடிக்கை, அது உள்ளீட்டிலும் பயனிலும் இச்சட்டத்தின் உட்கருத்துடனும் பொருளுடனும் இசைந்தொழுகினால் மற்றும் மதிப்பீடுசெய்யப்பட்ட அல்லது மதிப்பீடுசெய்யப்படுவதற்கு உட்கருதப்பட்ட அல்லது அதன்மூலம் பாதிக்கப்பட்ட ஆள், பொது உட்கருத்துக்கும் புரிந்துணர்வுக்கும் இணங்க அதன்கண் பெயர்குறிக்கப்படின், படிவமில்லாமை காரணமாக ஒழிக்கப்படுதலோ அல்லது வறிதானதென அல்லது வறிதாக்கப்படற்பாலதெனக் கருதப்படுதலோ ஆகாது, அல்லது அதன்கண்ணுள்ள ஒரு பிழை, குறைபாடு அல்லது விட்டுவிடுகை காரணமாகப் பாதிக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, அத்தகைய மதிப்பீடுபற்றிய அறிவித்தல் குற்றஞ்சாட்டப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஆளுக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டு இவ்வுட்பிரிவின்

(அ) என்னும் பந்தியிற்றரப்பட்டுள்ள விபரங்களை உள்ளீட்டிலும் பயனிலும் கொண்டிருப்பின், பின்வருவன காரணமாகப் பாதிக் கப்படுதலோ அல்லது எதிர்க்கப்படுதலோ ஆகாது:-

(அ) விதிக்கப்படற்பாலவரான ஆளின் பெயர் அல்லது தகப்பனின் பெயர், பொறுப்பாகவுள்ள மொத்த விற்பனை வரவின் பெறுமதியினது தொகை அல்லது விதிப்பனவுசெய்யப்பட்ட அறவீட்டுத் தொகைபற்றி அதன்கண்ணுள்ள ஒரு பிழை; அல்லது

(ஆ) மதிப்பீட்டுக்கும் அதற்கான அறிவித்தலுக்கும் இடையே யான ஏதேனும் வேறுபாடு.

கட்டிடங்களை அல்லது இடங்களைத் தேடுகையிடு வதற்கான தத்துவம்

**51.** (1) ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்படுகின்ற திணைக்களத்தின் எவரேனும் அலுவலர், அவசியமானவிடத்து சமாதான அலுவல ரொருவருடன் சேர்ந்து பின்வரும் செயல்களுள் எல்லாவாற்றையும் அல்லது எவற்றையும் செய்யலாம்:-

(அ) அவரது அபிப்பிராயத்தில் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் வழக்குநடவடிக்கைக்காகப் பயன்படும் அல்லது அவற்றுக்கு இயைபாகவிருக்கும் எவையேனும் கணக்குப்புத்தகங்கள், இடாப்புக்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் கண்டுபிடிக்கப்படலாம் என நம்புவதற்கு அவருக்குக் காரணமுள்ள ஏதேனும் கட்டிடத்தினுள் அல்லது இடத்தினுள் பிரவேசித்து அதனைத் தேடுகையிடலாம் மற்றும் அவை கண்டுபிடிக்கப்படின் அவற்றைப் பரிசோதனை செய்யலாம்;

(ஆ) அத்தகைய எவையேனும் கணக்குப்புத்தகங்களை, இடாப்புக்களை, பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைக் கைப்பற்றலாம் அல்லது அவற்றின்மீது அடையாளங்காணல் குறிகளை இடலாம் அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுத்தபகுதிகளை அல்லது பிரதிகளைத் தயாரிக்கலாம்; அத்துடன்

(இ) அவரது அபிப்பிராயத்தில் இச்சட்டத்தின் கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளுக்காகப் பயன்படுகின்றதும் அல்லது இயைபாகவிருக்கின்றதும் இப்பிரிவின் கீழான ஏதேனும் தேடுகையின் போது கண்டுபிடிக்கப்படுகின்றதுமான வேறேதேனும் பொருளைப்பற்றி ஒரு குறிப்பை அல்லது பொருட்பதி வேட்டைச் செய்யலாம் என்பதுடன் தேடுகைகள் தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழான தேடுகைகளுக்கு, இயன்றளவுக்கு, ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவில், “சமாதான அலுவலர்” என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளிக்குமுன்னர் ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய அலுவலரினால் அத்தகைய தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதனை அவசியமாக்குகின்ற சூழ்நிலைகளைப் பதிதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் எவரேனுமாளிடமிருந்து எவையேனும் கணக்குப்புத்தகங்களை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைத் தனதுடைமையில் எடுக்குமிடத்து, அத்தகைய அலுவலர், தனதுடைமையில் அவர் எடுத்துக்கொண்ட புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் குறித்துரைக்கின்ற குறிப்பறிக்கையொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(5) எவரேனும் அலுவலரினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தனதுடைமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம், அத்தகைய

புத்தகத்தின், இடாப்பின், பதிவேட்டின் அல்லது வேறு ஆவணத்தின் நுனித்தாராய்வுக்காக அல்லது அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எந்த ஆளுக்குச் சொந்தமானதோ அந்த ஆளுக்கெதிராகச் சட்ட வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்காக அவசியமாகக்கூடியவாறான காலத்துக்கு அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

வரிவிதிக்கப் படற்பாலதான செயற்பாடு கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப் படும் இடத்தைத் தேடுகையிடு வதற்கான தத்துவம்

**52.** (1) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென எழுத்தில் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட திணைக்களத்தின் வேறெவரேனும் அலுவலர், பின்வரும் எல்லாச் செயல்களையும் அல்லது அவற்றுள் எவற்றையும் செய்யலாம்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப் படுகின்றனவாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு எவரேனுமாளினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் ஏதேனும் இடத்தினுள் அல்லது கட்டிடத்தினுள் பிரவேசித்து அதனைச் சோதனையிடலாம்;

(ஆ) அதன்கண் கண்டுபிடிக்கப்படக்கூடிய ஏதேனும் கணக்குப்புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறேதேனும் ஆவணத்தைத் திறந்து பரிசோதனை செய்யலாம் என்பதுடன் அதன்கண் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுள் எவைபற்றியும் பொருட்பதிவேடொன்றைத் தயாரிக்கலாம்;

(இ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் கணக்குப்புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனை செய்து அவற்றின் பிரதிகளை எடுக்கலாம் அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுத்தபகுதிகளைத் தயாரிக்கலாம்;

(ஈ) ஏதேனும் கணக்குப்புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை உடைமையிலெடுக்கலாம் அல்லது அவற்றின்மீது அடையாளக்குறிகளை இடலாம்;

(உ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட காசை எண்ணி உடனடியாகப் பதிவொன்றைச் செய்யலாம்;

(ஊ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் அவர் கண்டுபிடிக்கும் எவரேனுமாளை, இச்சட்டத்தின்கீழான கருமங்கள் தொடர்பில் அவரது அறிவுக்குட்பட்ட அத்தகைய தகவல்களைக் கொடுக்குமாறு தேவைப்படுத்தலாம்; அத்துடன்

(எ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் அவர் கண்டுபிடிக்கும் ஒவ்வோராளையும், இச்சட்டத்தின் கீழான கருமங்கள் தொடர்பில் அவர் தகுதியானதெனக் கருதுகின்றவாறு ஒன்றில் தனியாகவோ அல்லது வேறெவரேனும் ஆளின் சமூகத்திலோ விசாரணை செய்யலாம்.

(2) ஓராம் உப்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் எவரேனுமாளிடமிருந்து ஏதேனும் கணக்குப்புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைத் தனதுடைமையில் எடுத்துக்கொள்ளுமிடத்து, அத்தகைய அலுவலர் தனதுடைமையில் அவர் எடுத்துக்கொண்ட புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் குறித்துரைக்கின்ற குறிப்பறிக்கையொன்றை அவ்வாளுக்கு வழங்குதல் வேண்டும்.

(3) எவரேனும் அலுவலரினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தனதுடைமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம், அத்தகைய புத்தகத்தின், இடாப்பின், பதிவேட்டின் அல்லது வேறு ஆவணத்தின் நுனித்தாராய்வு நோக்கங்களுக்காக அல்லது

அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எந்த ஆளுக்குச் சொந்தமானதோ அந்த ஆளுக்கெதிராகச் சட்ட வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்காக அத்தகைய உடைமைக்கெடுத்தல் தேதியிலிருந்து மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், விடயத்துக்கேற்ப, 45 ஆம் அல்லது 46 ஆம் பிரிவின்கீழ் வேண்டுமென்று தட்டிக்கழித்தலின் விடயத்தில் ஆணையாளர் தலைமையதிபதி வழக்குத்தொடுத்துள்ளவிடத்து, அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது ஆவணம், அத்தகைய குற்றவழக்கின் நோக்கங்களுக்காக அது தேவைப்படும் காலத்துக்கு வைத்திருக்கப்படலாம்.

பதிவேடுகளை வைத்திருத்தல்

**53.** (1) பதிவுசெய்யப்பட்ட ஆளொவ்வொருவரும், அறவீட்டின் செலுத்துகைக்கான பொறுப்பை நிச்சயிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியை அல்லது அதற்கென ஆணையாளர் தலைமையதிபதினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரை இயலச்செய்வதற்கு அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் வரிவிதிக்கப்படற் பாலதான செயற்பாடு தொடர்பில் பதிவேடுகளை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பேணப்படவேண்டிய பதிவேடுகளின் படிவமும் அதன்கண் சமர்ப்பிக்கப்படவேண்டிய விபரங்களும் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காகப் ''பதிவேடுகள்'' என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-

(அ) கணக்குப்புத்தகங்கள் (ஒரு கைந்நூலில், பொறிமுறை அல்லது இலத்திரனியல் படிவத்தில் அல்லது அதன் இணைப்பில் அடங்கியுள்ளதாயினுஞ்சரி), செலுத்துகைகளின் பெறுகைகளைப் பதிதல், வருமானம் அல்லது

செலவினம் மற்றும் உறுதிச்சீட்டுக்கள், வங்கிக்கூற்றுக் கள், விலைப்பட்டி, வரி விலைப்பட்டிகள், வரி வரவுப் பத்திரங்கள், வரிப்பற்றுப் பத்திரங்கள், பற்றுச்சீட்டுகள் மற்றும் அத்தகைய எவையேனும் கணக்குப்புத்தகங் களிலான பதிவீடுகளைச் சரிபார்ப்பதற்கு அவசிய மானவாறான அத்தகைய வேறு ஆவணங்கள் என்பவற்றையும் உள்ளடக்கும்;

(ஆ) பண்டங்களின் கையிருப்பு வைத்திருக்கப்படும் ஏதேனும் பண்டகசாலையின், கிட்டங்கியின் அல்லது வேறேதேனும் இடத்தின் விபரங்களும், விடயத்துக்கேற்ப, அத்தகைய பண்டகசாலைகளில், கிட்டங்கியில் அல்லது வேறேதேனும் இடத்தில் வைத்திருக்கப்படும் பண்டங் களின் கையிருப்பும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் பேணப்படுவதற்கு அல்லது வைத்திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் நிரல் அல்லது பதிவேடு.

## பாகம் XI

### நிருவாக ஏற்பாடுகள்

சட்டத்தின் நிருவாகம்

**54.** *(1)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அவசியமாகக்கூடியவாறாக (இச்சட்டத்தில் "திணைக்களம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அத்தகைய எண்ணிக்கையினரான பிரதி ஆணையாளர் தலைமையதிபதிகள், சிரேட்ட ஆணையாளர்கள், ஆணையாளர்கள், சிரேட்ட பிரதி ஆணையாளர்கள், பிரதி ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் என்போரினால் உதவப்பட்ட ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

*(2)* *(அ)* இச்சட்டத்தினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது

பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்று வதற்கு ஆணையாளர் தலைமையதிபதி, திணைக்களத்தின் எவரேனும் பிரதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு, சிரேட்ட ஆணையாளருக்கு, ஆணையாளருக்கு, சிரேட்ட பிரதி ஆணையாள ருக்கு, பிரதி ஆணையாளருக்கு அல்லது உதவி ஆணையாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

(ஆ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக் கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கின்ற, புரிகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற திணைக்களத்தின் ஒரு பிரதி ஆணையாளர் தலைமையதிபதி, சிரேட்ட ஆணையாளர், ஆணையாளர், சிரேட்ட பிரதி ஆணையாளர், பிரதி ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளர், முரணானது எண்பிக்கப்படும்வரை, அத்தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்று வதற்கு அதிகாரமளிக்கப்பட்டவராக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) திணைக்களத்தின் ஆணையாளரொருவர் அல்லது சிரேட்ட பிரதி ஆணையாளரொருவர், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டி னால் ஓர் உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

படிவங்கள்

**55.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்களை ஆணையாளர் தலைமையதிபதி காலத்துக்குக்காலம் குறித்துரைக்கலாமென்பதுடன் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் படிவம், காலத்துக்குக்காலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் திருத்தவும்படலாம்.

இலத்திரனியல் தொடர்பாடல் களைப் பயன்படுத்துதல்

**56.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சர், ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரையின்மீது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுக்காகத் தரவுச்

செய்திகள், இலத்திரனியற் பதிவேடுகள், இலத்திரனியல் ஆவணங்கள் அல்லது இலத்திரனியல் தொடர்பாடல்களின் பாவனைக்கு அதிகாரமளிக்கின்ற அல்லது அதனை வசதிப்படுத்து கின்ற ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

**ஆணையாளர் தலைமையதிபதி தகவல்தருநர்களுக்கு வெகுமதிகளைச் செலுத்தலாம்**

**57.** ஆணையாளர் தலைமையதிபதி, பாராளுமன்றத்தினால் அந்நோக்கத்துக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட பணத்தொகை களிலிருந்து, செலுத்தப்படற்பாலதானதும் வேறெவரேனும் ஆளினால் செலுத்தப்பட்டதுமான மதிப்பீட்டை விளைவிக்கின்ற தகவல்களை வழங்குகின்ற எவரேனும் தனியாளுக்கு, விடயத்தின் சூழ்நிலைகளில் நியாயமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய பணத்தொகைகளைச் செலுத்தலாம்.

**அலுவலக முறையான இரகசியம்**

**58.** (1) இச்சட்டத்தின்கீழான கடமையொன்றைக் கொண்டுள்ள அல்லது இச்சட்டத்தின் நிருவாகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொவ்வொருவரும் ஒரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் தொடர்பாக அலுவலகமுறையான தன்மையில் பெறப்பட்ட எல்லாத் தகவல்களையும் இரகசியமானவையாகவும் அந்தரங்கமானவை யாகவும் கருதுதல் வேண்டுமென்பதுடன் அத்தகவல்களைப் பின்வரும் ஆட்களுக்கு மட்டுமே வெளிவிடலாம்:-

(அ) திணைக்களத்தினதும் சுங்கத் திணைக்களத்தினதும் ஊழியர்கள் கடமைகளை நிறைவேற்றும்போதும் அந்நோக்கத்துக்காகவும் அவர்களுக்கும்;

(ஆ) திணைக்களத்தின் மேற்பார்வையை நிறைவேற்றும் போதும் அந்நோக்கத்துக்காகவும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கும்;

(இ) அலுவலகமுறையான நோக்கங்களுக்காக அத்தகைய வெளிவிடுகை அவசியமானபோது மட்டும் கணக்காய் வாளர் தலைமையதிபதிக்கும் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கும்;

(ஈ) ஒரு குறிப்பிட்ட அதிகாரியுடன் செய்துகொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கைக்கிணங்க ஒரு வெளிநாட்டின் எவரேனும் வரி அதிகாரிக்கும்;

(உ) அரசினால் வழக்குகள் தொடுக்கப்படுமிடத்து அல்லது அரசுக்கெதிராக வழக்குகள் கோப்பிடப்படுமிடத்து அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயம் அல்லது மதியுரை திணைக்களத்தினால் எழுத்தில் நாடப்பட்டுள்ளவிடத்து ஏதேனும் குற்றவியல் அல்லது குடியியல் வழக்குநடவடிக்கையின் நோக்கத்துக் காகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும்;

(ஊ) ஒரு தவறுதொடர்பில் பதிவுசெய்யப்பட்ட ஆளொரு வரின் வரிப்பொறுப்பை அல்லது பொறுப்புடைமையை நிலைநாட்டுவதற்கானவொரு வழக்குநடவடிக்கையில் ஒரு நீதிமன்றத்துக்கும்;

(எ) அத்தகைய வெளிவிடுகை அலுவலகமுறையான கடமைகளின் நோக்கங்களுக்காக மட்டும் அவசியமாக வுள்ளபோது, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும்;

(ஏ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் மீறுகைகளுக்காகக் குற்ற வழக்குத்தொடுக்கின்ற நோக்கத்துக்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கும்;

(ஐ) எவரேனுமாளின் அல்லது அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணையின் அல்லது பிள்ளையின் அலுவல்கள்பற்றிய புலனாய்வொன்றில் 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணை ஆணைக்குழுவுக்கும்; அத்துடன்

(ஒ) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல் களைப்புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தகவல்களைப் பெறுகின்ற ஆளொருவர், இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் வெளிவிடுகை அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச அளவுவரைதவிர, அத்தகைய தகவல்கள்பற்றி இரகசியத்தைப் பேணுதல் வேண்டும்.

(3) இப்பிரிவினால் விதிக்கப்பட்ட இரகசியம்பற்றிய கடப்பாடு, எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்படா தொழிகின்றமை அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலுக்கமர்த்தப்படாதொழிகின்றமை எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆள் தொடர்பில் தொடர்ந்து ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் XII

### பொது

ஒழுங்கு விதிகள்

**59.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் வெளியிடப் பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**60**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய– பொருள் கோடல்

"பொருள்" என்பது, எவையேனும் பண்டங்களை, பொருட்களை அல்லது ஏதேனும் கமத்தொழில் அல்லது தோட்டக்கலை விளைபொருளை உள்ளடக்கும்;

"உதவி ஆணையாளர்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஓர் உதவி உண்ணாட்டரசிறை ஆணையாளர் என்று பொருளாகும் என்பதுடன் ஒரு பிரதி ஆணையாளரையும் உள்ளடக்கும்;

"அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள வாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"ஆட்கள் குழு" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"தொழில்" என்பது, வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழிலை உள்ளடக்கும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள வாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"பிரதி ஆணையாளர்' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிரதி உண்ணாட்டரசிறை ஆணையாளர் என்று பொருளாகும்;

"சரக்கு அனுப்புநர்" என்பது, 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தப்படாப் பொதுக்

காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"இறக்குமதி" என்பது, பயணியின் சொந்தப் பயணப்பொதியில் இலங்கையினுள் கொண்டுவருவதனைத் தவிர்க்கின்றது ["பயணப்பொதி" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 107அ என்னும் பிரிவிலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்];

"உற்பத்தி" என்பது, பின்வருவனவற்றுக்கான ஏதேனும் நடைமுறை என்று பொருளாகும்:-

(அ) ஒரு பொருளைத் தயாரித்தல்;

(ஆ) இரசாயன நடைமுறைமூலமாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி ஏதேனும்பொருளைப் பொருத்துதல் அல்லது இணைத்தல்;

(இ) ஏதேனும் பொருளை விற்பனைக்காக இசைவாக்குதல்; அத்துடன்

(ஈ) ஒரு சில்லறைக்கடையில் புறநீங்கலாகவும் நேரடியாகவும் பாவனையாளருக்கு விற்பனை செய்யும் நோக்கத்துக்காக அத்த கைய கடையிலல்லாது ஏதேனும் பொருளைப் பொதியிடுதல், போத்தலிலடைத்தல், பெட்டி களினுள் இடுதல், துண்டுகளாக வெட்டுதல், துப்புரவாக்குதல், மெருகூட்டுதல், சுற்றுதல், சுட்டுத்துண்டிடுதல் அல்லது எத்தகையது மான வேறெந்தவழியிலும் விற்பனைக்காகத் தயாரித்தல்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

''வதிவற்ற ஆட்கள்'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின்கீழ் வதிவற்ற ஆட்களாகவுள்ள ஆட்கள் என்று பொருளாகும்;

''திறந்த சந்தைப் பெறுமதி'' என்பது, ஏதேனும் தேதியில் பொருளின் ஏதேனும் விற்பனை அல்லது சேவையின் வழங்குகை தொடர்பாக, இணைந்த ஆட்களாகவிராத ஆட்களிடையே சுதந்திரமாக முனையப்பட்டுச் செய்யப்பட்ட ஒரு விற்பனையாக அல்லது வழங்குகையாக உள்ளதும், இலங்கையில் அத்தேதியில் ஒத்த சூழ்நிலைகளில் விற்பனைசெய்யப்படின் அல்லது வழங்கப்படின் ஓர் ஒத்த விற்பனையை அல்லது வழங்குகையைப் பொதுவாகப் பெறுகின்றதுமான பணத்திலான பிரதிபயன் என்று பொருளாகும்;

''பங்காண்மை'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

''ஆள்'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

''காலாண்டு'' என்பது, ஏதேனுமாண்டின் சனவரி, ஏப்பிறல், யூலை அல்லது ஒற்றோபர் மாதங்களின் முதலாவது நாளன்று தொடங்குகின்ற மூன்று மாதக்காலப்பகுதி என்று பொருளாகும்;

''பதிவுசெய்யப்பட்ட விநியோகிப்பாளர்'' என்பது, இலங்கையில் எவையேனும் பண்டங்களின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பாக, காலத்துக்குக்காலம்

அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது தயாரிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விலையில், அத்தகைய பண்டங்களை மொத்தவிற்பனைச் சந்தையில் விற்பனைசெய்வற்காக அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது தயாரிப்பாளரினால் நியமிக்கப்பட்ட எவரேனுமாள் அல்லது பங்காண்மை என்று பொருளாகும்;

“சேவை” என்பது, ஏதேனும் நிலைச்சொத்துத் தொழிலையும் அதன்மீதான சீராக்கத்தையும் உள்ளடக்கும்; அத்துடன்

“நிதிச்சேவைகளை வழங்குதல்” என்பது, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 25<u>ஊ</u> என்னும் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

**61.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

## முதலாம் அட்டவணை

[பிரிவு 3(2)(அ)மற்றும்(ஆ)]

பாகம் Iஅ

### விலக்களிக்கப்பட்ட பொருட்கள்

1. உற்பத்தியாளரினால் ஏற்றுமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள்;

2. ஏற்றுமதிக்காக ஏதேனும் பொருளை உற்பத்திசெய்வதில் அல்லது அதற்காகப் புறநீங்கலாகப் பயன்படுத்துவதற்காக எவரேனுமாளினால் இறக்குமதிசெய்யப்பட்டதும் ஒரு பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்தியாகவிராததுமான ஏதேனும் பொருள்;

3. எவரேனும் ஏற்றுமதியாளருக்கு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவரினால் விற்பனைசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் ஆக்கக்கூறின் ஒரு பாகமாகவுள்ளதாக, உற்பத்திசெய்யப்பட்ட அத்தகைய பொருள் அல்லது வேறேதேனும் பொருள், அத்தகைய ஏற்றுமதியாளரினால் நேரடியாக அல்லது ஏற்றுமதி நோக்கங்களுக் காகத் தாபிக்கப்பட்ட ஒரு வியாபார மனையினூடாக இலங்கையிலிருந்து உண்மையாக ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி ஏதேனும் ஆவணமுறையான சான்று காண்பிக்கப்படு வதன்மீது திருப்திப்படின், அத்தகைய பொருள்;

4. இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் பின்வரும் காரணங்களுக் காக இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படுகின்றதென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படின்:-

   (அ) ஒரு கண்காட்சியில் வெளிக்காட்டிவைக்கப்படுவதற்காக;

   (ஆ) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் இலங்கையில் தற்காலிகமாகப் பயன்படுத்தப்படுவதற்காக;

   (இ) இலங்கையில் நிறைவேற்றப்படவேண்டிய அப்பொருளுக்கான பழுதுபார்த்தல் நோக்கங்களுக்காக;

   (ஈ) வேறேதேனும் ஒத்த நோக்கத்துக்காக; அத்துடன் அத்தகைய பொருள் இறக்குமதிசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியினுள் அல்லது அத்தகைய கருத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டபின்னர் தொண்ணூறு நாட்களைக்கொண்ட காலப்பகுதியினுள் மீளக்கப்பலேற் றப்படவுள்ளது; அல்லது

   (உ) இலங்கையில் ஏதேனும் திரைப்படஞ்சார் திரைப்படத்தை அல்லது தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்து தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரத்துடன்

மேற்கொண்டு நடைமுறைப்படுவத்துவதற்காக அல்லது அச்சிடுவதற்காக.

5. இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள்; அது இறக்குமதி செய்யப்படுமுன்னர் பழுதுபார்த்தல்களுக்காக இலங்கையிலிருந்து எடுத்துச்சொல்லப்பட்டதெனச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படின், அத்தகைய பொருள்;

6. ஏதேனும் வான்சேவைக் கம்பெனியினால் அல்லது கப்பற்றொழில் கம்பெனியினால் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் உதிரிப்பாகம், சர்வதேசப் போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்டதும் அத்தகைய வான்சேவைக் கம்பெனியினால் அல்லது கப்பற்றொழில் கம்பெனியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதும் அல்லது வாடகைக்கமர்த்தப்பட்டதுமான ஏதேனும் வானூர்தியை அல்லது கப்பலைப் பேணுவதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படின் அத்தகைய உதிரிப்பாகம்;

7. ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்புக்கு அல்லது அத்தகைய ஒழுங்கமைப்பின் ஏதேனும் விசேடித்த முகவராண்மைக்கு அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் தூதரகக் குழுவுக்கு அல்லது அத்தகைய குழுவின் தூதரகப் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது ஒரு தூதரகக் குழுவின் அந்தஸ்தைக் கொண்டவராக வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் விதப்புரையின்மீது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறெவரேனுமாளுக்கு விற்பனைசெய்யப்பட்ட ஏதேனும் பொருள்;

8. இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின்கீழ் விதிப்பனவுசெய்யப்பட்ட விசேட வியாபாரப்பண்டத்தின் அறவீட்டுக்கு அமைந்ததாகவிருப்பின் அத்தகைய பொருள்;

9. உரம்;

10. சுங்க நோக்கத்துக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் குறியீட்டிலக்கங்கங்களின்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட உராய்வுநீக்கிகள்தவிர, பெற்றோலியமும் பெற்றோலியத் தயாரிப்புகளும்;

11. எல்.பீ.வாயு;

12. ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் குறியீட்டு முறைமையின்கீழ் அடையாளங்காணப்பட்ட மருந்தாக்கற் பொருட்கள்;

13. கொழும்புத் தேயிலை ஏலவிற்பனைகளில் விற்பனைசெய்யப்படுவதற்காக எவரேனும் பதிவுசெய்யப்பட்ட தரகருக்கு 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச்சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச்சபையுடன் பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரொருவராகவுள்ள உற்பத்தியாளரினால் வழங்கப்பட்ட தேயிலை;

14. நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டும் இயைபான அமைச்சரினாலும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் பயன்படுத்தப்படுவதற்கானதும் அத்தகைய கருத்திட்டம் தொடர்பிலான வரி அரசாங்கத்தினால் பொறுப்பிக்கப்பட்டவிடத்தும், ஏதேனும் பொருள்;

15. HS குறியீடு இல.2714 இன்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட பிட்டுமென்;

16. இயைபான அதிகாரியின் அங்கீகாரத்துக்கமைய மருந்தாக்கற் பொருட்களை உற்பத்திசெய்வதற்காக இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்கள் அல்லது பொதியிடும் பொருட்கள்;

17. வேலை பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் பண்டங்கள் மீள ஏற்றுமதிசெய்யப்படும் என்ற நிபந்தனையின்மீது, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு நன்மைபயப்பதாக நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பயன்பாட்டுக்காகத் தற்காலிக அடிப்படையில் இறக்குமதிசெய்யப்பட்ட பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனம்;

18. HS குறியீடுகள் 4907.00.90 இன்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட தாள்களாகவுள்ள வெளிநாட்டு நாணயத் தாள்கள்;

19. இயைபான அதிகாரியின் அங்கீகாரத்துக்கமைய ஆயுர்வேத மருந்துக்குறிப்புநூலுக்குரிய ஆயுர்வேதத் தயாரிப்புகளை அல்லது ஆயுர்வேதத் தயாரிப்புகளை உற்பத்திசெய்வதற்காக இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்கள் அல்லது பொதியிடும் பொருட்கள்;

20. இறக்குமதிப் புள்ளியில், HS 0102.10 இன்கீழ் அல்லது HS 0104.20.10 இன்கீழ் கலப்பற்ற இனப்பெருக்க விலங்குகள், HS 8434.10 இன்கீழ் பால் கறக்கும் பொறிகள், HS 8434. 20 இன் கீழ் பாற்பண்ணை எந்திரத்தொகுதி மற்றும் HS 8434. 90 இன் கீழ் உதிரிப்பாகங்கள்;

21. இறக்குமதிப் புள்ளியில், சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் குறியீட்டு இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட சூரிய சக்திவலுவைப் பிறப்பாக்கஞ் செய்வதற்குச் சூரியப்படல் தகவலலகுகள், துணைப்பொருட்கள் அல்லது சூரியசக்தி வீட்டு முறைமைகள்;

*22.* நிலக்கரி;

*23.* இரண்டாயிரத்து எட்டாமாண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமாக அடையாளங்காணப்பட்டவொரு கம்பெனியினால் உற்பத்திசெய்யப் பட்டனவும் நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறொரு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது ஒரு விசேடித்த கருத்திட்டத்துக்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டவொரு கம்பெனிக்கு விற்பனைசெய்யப் பட்டனவுமான எவையேனும் பொருட்கள் இறக்குமதி மாற்றீடாகக் கருதப்பட்டு கருத்திட்ட நடைமுறைப்படுத்துகைக் காலப்பகுதியின்போது வழங்கப்படுமளவுக்கு, அத்தகைய பொருள்; அத்துடன்

*24.* சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரணக் குறியீட்டு இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்டு நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட எந்திரத்தொகுதி அல்லது சாதனமாக உள்ளதும், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரச் சபையினால் மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ்செய்யும் நோக்கத்துக்காக அல்லது மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை மின்சாரச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள ஏதேனும் நிறுவனத்தி னால் இறக்குமதிசெய்யப்பட்டதும் அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டதுமான ஏதேனும் எந்திரத்தொகுதி அல்லது சாதனம்.

பாகம் Iஆ

[*பிரிவு 3(2)(ஈ)*]

**விலக்களிக்கப்பட்ட பொருட்கள்**

*1.* மருந்தாக்கற் பொருட்கள்;

*2.* ஏதேனும் பொருள், விற்பனைக்காக இசைவாக்குதல் தவிர்ந்த ஏதேனும் நடைமுறைப்படுத்தலின்றி அத்தகைய பொருளின் இறக்குமதியாளரி னால் விற்பனைசெய்யப்படுமிடத்து, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுக்கமைந்த அத்தகைய பொருள்;

*3.* ஏற்றுமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள்;

*4.* ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய்;

*5.* எல்.பீ. வாயு; அத்துடன்

*6.* எவரேனும் உள்நாட்டு உற்பத்தியாளரிடமிருந்து அல்லது உள்நாட்டுத் தயாரிப்பாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உடன்பால், பசுமையான இலை, கறுவா அல்லது இறப்பர் (இறப்பர்பால், முறுக்க அல்லது தாள் இறப்பர்).

பாகம் II

**விலக்களிக்கப்பட்ட சேவைகள்**

1. ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்தொன்பதாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரசபையினால் மின்சாரம் வழங்கப்படுவதனைத் தவிர மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ்செய்தலும் மின்சாரத்தை வழங்குதலும்;

2. மருத்துவச் சேவைகள்;

3. நீர்வழங்கல்;

4. பண்டங்களையும் பயணிகளையும் இடம்பெயர்த்தல்;

5. ஏதேனும் பொருளின் தரத்தையும் பண்பையும் சீராக்குவதுடன் நேரடியாகத் தொடர்புபட்ட சேவைகளாகவுள்ள, அத்தகைய பொருளின் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்ட சேவைகள்;

6. தைத்த ஆடைகளின் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்ட அத்தகைய தைத்த ஆடைகள் பற்றிய சேவைகள்;

7. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்திரெண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர்க்கு, கலன்களுக்கு செயற்படுத்தப்படாப் பொது காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு சரக்கு அனுப்புநரினதும் கப்பற்றொழில் முகவரினதும் சேவைகள் அல்லது விரைதூதர் சேவைகள் இலங்கையிலிருந்து ஏதேனும் பொருளின் ஏற்றுமதியாளர் தொடர்பில் இருக்குமளவுக்கு அத்தகைய சேவைகள்;

8. ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் சேவைகள் இலங்கையிலிருந்து ஏதேனும் பொருளின் ஏற்றுமதி தொடர்பில் இருக்குமளவுக்கு அத்தகைய சேவைகள்;

9. விடயத்துக்கேற்ப, ஓர் ஏலவிற்பனையாளரினால் அல்லது தரகரினால் பெறப்படற்பாலதான தரகுக்கட்டணத்தின் அல்லது ஒரு காப்புறுதி முகவரினால் அல்லது தரகு முகவரினால் பெறப்படற்பாலதான தரகின் அளவுக்கு, ஏதேனும் உள்நாட்டுத் தயாரிப்பின் அத்தகைய ஏலவிற்பனையாளர், தரகர், காப்புறுதி முகவர் அல்லது தரகு முகவரின் சேவைகள்;

10. தொழிற்படுத்தப்படும் உள்வரும் சுற்றுலாப் பயணங்கள் தொடர்பில் ஒரு பயண முகவரின் சேவைகளுக்கான கொடுப்பனவு ஒரு வங்கியினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுமிடத்தும்

அத்தகைய முகவர் இலங்கை உல்லாசப்பயணச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டிருக்குமிடத்தும் அவரின் சேவைகள்;

11. வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்காக, இலங்கைக்கு வெளியேயான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடையாளங் காணப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு வாடிக்கையாளர் ஆதாரச் சேவைகளைப் புறநீங்கலாக வழங்குவதற்காக, இணையத்தளம், தொலைபேசி என்பனமூலம் அல்லது ஒரு தொழில்முயற்சியினால் வழங்கப்பட்ட அத்தகைய சேவைகள்;

12. ஆயுட்காப்புறுதித் தொழில்;

13. பிரதானமாகப் படமாளிகைகளில் காட்சிக்குவிடுவதற்காக எவையேனும் திரைப்படஞ்சார் திரைப்படங்களை விநியோகித்தல், தயாரித்தல் மற்றும் வழங்குதல்;

14. ஒரு படமாளிகையில் திரைப்படங்களைக் காட்சிக்குவிடுதல்;

15. ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்புக்கு அல்லது அத்தகைய ஒழுங்கமைப்பின் ஏதேனும் விசேடித்த முகவராண்மைக்கு அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் தூதரகக் குழுவுக்கு அல்லது அத்தகைய குழுவின் தூதரகப் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது ஒரு தூதரகக் குழுவின் அந்தஸ்தைக் கொண்டவராக வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் விதப்புரையின் மீது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறெவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் சேவை;

16. வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்காக இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்காக, அத்தகைய வெளிநாட்டு நாணயம் ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படின், இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனுமாளுக்கு அல்லது பங்காண்மைக்கு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அளிக்கப்பட்ட ஏதேனும் சேவை;

17. நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு நிதிகள் அல்லது நன்கொடைகளிலிருந்து கொண்டுநடாத்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கு வழங்கப்பட்ட சேவைகள்.

18. (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவை;

19. அரசாங்கத்தின் சார்பில், திரட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து அல்லது அரசாங்கத்தினூடாக ஒழுங்கேற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஏதேனும்

கூட்டுத்தாபனத்தினால் கட்டணமின்றி வழங்கப்பட்ட ஏதேனும் சேவை;

20. ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையினால் வழங்கப்பட்ட சேவைகள்;

21. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு நன்மைபயப்பதாக, நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறான கருத்திட்டங்களாக வுள்ள பாரிய அளவிலான உட்கட்டமைப்புக்கான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக வெளிநாட்டு ஆலோசனை வழங்குகைகளினால் வழங்கப்பட்ட சேவைகள்;

22. வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்காக சர்வதேசச் சந்தைக்காகக் கப்பற் கட்டியமைத்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சேவைகள்; அத்துடன்

23. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், சகாய நிதியம், ஓய்வூதிய நிதியம், ஓய்வூதிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மற்றும் பணிக்கொடை நிதியம் என்பவற்றினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவை.

## இரண்டாம் அட்டவணை

[*பிரிவு 3(1)*]

### பொறுப்பாகவுள்ள மொத்தவிற்பனைவரவு

| | *பொறுப்பாகவுள்ள மொத்தவிற்பனைவரவு* |
|---|---|
| 1. ஏதேனும் பொருளின் இறக்குமதி [*பிரிவு 2(அ)*] | *பிரிவு 3 (2)(அ)* இல் குறிப்பீடுசெய்யப்பட்ட மொத்தவிற்பனைவரவின் 100% |
| 2. ஏதேனும் பொருளின் உற்பத்தி [*பிரிவு 2(ஆ)*] | *பிரிவு 3(2)(ஆ)* இல் குறிப்பீடுசெய்யப்பட்ட மொத்தவிற்பனைவரவின் 85% |
| 3. ஒரு சேவையை வழங்குதல் [*பிரிவு 2(இ)*] | |
| (அ) நிதிச்சேவைகளை வழங்குதல் | *பிரிவு 3(2)(இ)*(i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட நிதிச்சேவைகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான பெறுமதிச் சேர்ப்பின் 100%<br><br>அத்தகைய நிதிச் சேவைகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான |

| | |
|---|---|
| | பெறுமதிச் சேர்ப்பு, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் அத்தியாயம் IIIஅ இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்றிக்கூறப்படற் பாலதான முறையை ஏற்புடையதாக்குவதன்மூலம் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக நிதிச் சேவைத் தொழிலின்மீது அறவீட்டைக் கொடுப்பனவு செய்வதற்காகக் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்: <br><br> ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நிதிச்சேவைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான பெறுமதிச் சேர்ப்பைக் கணக்கிடுவதில், ஒவ்வோர் இயைபான காலாண்டுக்காகவும் இலாபங்களின் தொகையைச் செம்மையாக நிச்சயிக்க முடியாதவிடத்து, அத்தகைய தொகை கிடைக்கக்கூடிய தகவல்களின்மீது மதிப்பிடப்பட லாம். மதிப்பிடப்பட்ட தொகை வருடாந்த அடிப்படையின்மீது உண்மையான தொகையைக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுடன் பிரதிபலிப்பதற்குச் சரிசெய்யப்படு தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சரிசெய்தல் இயைபான கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவுத்தேதிக்குபின்னர் ஆறு மாதங்களினுள் சமர்ப்பிக்கப்படுத லும் வேண்டும்; |
| (ஆ) காணியும் சீராக்கங்களும் | பிரிவு 3(2)(இ)(ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்தவிற்பனைவரவின் 100%; அத்துடன் |
| (இ) (அ) மற்றும் (ஆ) தவிர்ந்த சேவைகள் | பிரிவு 3(2)(இ)(iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்தவிற்பனைவரவின் 100%. |

*4. மொத்தவிற்பனை மற்றும் சில்லறைவிற்பனை*

| | |
|---|---|
| *(அ) இலங்கையில் எவையேனும் பண்டங்களின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்டவொரு விநியோகிப்பாளரினால் ஏதேனும் பொருள் விற்பனை செய்யப்படுதல்; அத்துடன்* | *பிரிவு 3(2)(ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்தவிற்பனை வரவின் 25%.* |
| *(ஆ) இறக்குமதியும் விற்பனையும் உட்பட மேலே (அ) என்னும் விடயம் தவிர்ந்த மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை* | *பிரிவு 3(2)(ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்தவிற்பனை வரவின் 50%.* |